# சைவநெறி

## தரம் - 07

# ஆசிரியர் வழிகாட்டி

(2016 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

தேசிய கல்வி நிறுவகம்,

ஸ்ரீலங்கா

www.nie.lk

info@nie.lk

# சைவநெறி

## தரம் - 07

## ஆசிரியர் வழிகாட்டி

தேசிய கல்வி நிறுவகம்
முதற் பதிப்பு - 2016

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,

தேசிய கல்வி நிறுவகம்,

ஸ்ரீலங்கா.

இணையத்தளம் : www.nie.lk

மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்,
ஸ்ரீலங்கா.

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துவதற்கான அறிவுரைகள்

தேசிய கல்வி நிறுவகத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டி சைவநெறிப் பாடத்தை கற்றலால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடையும் வகையில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய இறைநம்பிக்கை,சமய நம்பிக்கை, சமய ஒழுகலாறு, வழக்காறு, விழுமியங்கள், தத்துவங்கள், சமய சமூக நடைமுறைகள், இலக்கியம் செயன்முறை அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் தேர்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டே ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான விடய உள்ளடக்கம் இவ் ஆசிரியர் வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்கள், தரவிருத்தி உள்ளீடுகள் கொடுக்கப்பட்டிருப்பதால், முன் கூட்டியே அவற்றை உரிய நேரத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்பு கிடைக்கின்றது.

பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை உறுதி செய்து கொள்வதற்குரிய பெறுமதிமிக்க ஆலோசனைகள் பல, கணிப்பீடும் மதிப்பீடும் என்ற பகுதியிலே உள்ளடக்கப்பட்டள்ளன பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் என்ற பகுதியை பாடசாலைக் கல்வியோடு சார்ந்த அனைவரும் முறையாக வாசித்து விளங்க வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்குக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வழங்கும் போதும் ஆசிரியர் பணிகளை மேற்பார்வை செய்யும் போதும், உரியவாறு நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கும், பாடசாலை முகாமைத்துவத்தில் உள்ளவர்களுக்கு இது தேவையான விளக்கத்தை அளிக்கிறது.

ஆசிரியர் வழிகாட்டியில் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய செயற்பாடுகள் உள்ளடக்கப்படட்டுள்ளன. இச் செயற்பாடுகளை ஆசிரியர் அவ்வாறே நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. தமது ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைகளுக்கும் ஏற்ப, செயற்பாடுகளை ஏற்றவிதமாக ஒழுங்குபடுத்திக் கொள்வது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணமாக நான்கு குழுக்களை அமைக்க வேணடுமென கூறியிருப்பினும் வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப அதை மாற்றிக் கொள்ளலாம். குழுச் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் விதமாக உரிய தீர்மானங்களை எடுக்கும் போது ஆசிரியர் சாதுர்யமாக நடந்து கொள்ளவேண்டும். உரிய தேர்ச்சி மட்டத்தை நிறைவு செய்யும் விதமாகச் செயற்பாடுகளுக்கு உரிய நேரம் வேறாக்கப்பட்டுள்ளது. ஒரு பாடவேளைக்கு அப்பாற் செல்ல ஆசிரியருக்கு நேரிடலாம் ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் போதியளவு நேரம் அந்தச் செயற்பாடுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் நேர அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தனிப் பாடவேளை, இருபாடவேளைகளுக்கு ஏற்றவாறு இச் செயற்பாடுகளைப் பகுதிகளாகச் செய்து கொள்ள வேண்டியது ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. முன்னைய நாள் ஆரம்பித்த செயற்பாடொன்றை தொடர்ந்து மறுநாள் செய்யும் போது முதன் நாள் நிறைவு செய்தவற்றை மீண்டும் அறிமுகம் செய்து, தொடர வேண்டும் என்பதும் உங்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.

யாதேனும் ஒரு தேர்ச்சி மட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வெவ்வேறான செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதன்படி உத்தேச செயற்பாடானது அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். என உங்களிடம் எதிர்பார்க்கபட்டவில்லை. மிகவும் சிறந்த பிரவேசத்துடன் கூடிய, ஆய்வுகளைக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவுபடுத்தக்கூடிய வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி, மேற் கொள்ளப்படும் சிறந்த கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டையே நாம் உங்களிடம் எதிர்பார்க்கின்றோம். புதிய விடயங்களை அறிமுகப்படுத்தும் போது உங்களின் வினைத்திறனையும் விளைதிறனையும் மேம்படுத்தும் நோக்கில் இவ் வழிகாட்டியை தேசிய கல்வி நிறுவகம் வழங்குகிறது. கணிப்பீட்டு, மதிப்பீட்டு செயற்பாடுகளை பயன்படுத்தி கற்றலை பரிசீலனை செய்து, உரிய மீளவலியுறுத்தல்களை செய்வது உங்கள் பணியாகும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றிக்கு மதிப்பீட்டு முறைகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. வழிகாட்டியில் செயற்பாடுகளின் இறுதியில் வீட்டில் செய்யப்படவேண்டியதும் ஆசிரியர்களால் அவதானிக்கப்பட வேண்டியதுமான செயற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது அவற்றை ஆசிரியர்கள் உரியவாறு செயற்படுத்தும் அதேவேளை மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல். சமூகத்திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பயனுள்ள கற்றல் கற்பித்தலில் ஈடுபடுவீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

திரு. பொன் ஜெயரூபன்,
விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

# கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் அனுமதியும்** | : | **கல்விசார் அலுவல்கள் சபை**<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **இணைப்பாக்கம்** | : | **திரு பொன் ஜெயரூபன்**<br>விரிவுரையாளர்,<br>சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **விடய ஆலோசனை** | : | **பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம்**<br>தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம். |
| | | **பேராசிரியர் கலாநிதி மா.கருணாநிதி,**<br>கல்விப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம். |

எழுத்தாளர் குழு

| | | |
|---|---|---|
| **உள்வாரி** | : | **திரு. பொன் ஜெயரூபன்**<br>விரிவுரையாளர்,,<br>சமயங்கள் மற்றும் விழுமியங்களுக்கான கல்வித் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **வெளிவாரி** | : | **திரு. எஸ். சேதுரட்ணம்,**<br>ஆசிரியர், பது/பண்டாரவளை தமிழ் ம.மகா வித்தியாலயம்,<br>பண்டாரவளை. |
| | - | **திருமதி. எம். சண்முகதாஸ்,**<br>ஆசிரியர், தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,<br>திருகோணமலை. |
| | - | **திருமதி. ஆர். யோகானந்தம்,**<br>ஆசிரியர், பிலி/நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம்,<br>நுகேகொட. |
| | - | **திருமதி. என். சுதமதி,**<br>ஆசிரியர், யாழ்/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி,<br>சாவகச்சேரி. |
| | - | **திரு. பெ. பேரின்பராசா,**<br>ஆசிரியர், மட்/களுதாவளை மத்திய மகா வித்தியாலயம்,<br>களுவாஞ்சிக்குடி. மட்டக்களப்பு. |
| **கணனி வடிவமைப்பு** | - | திருமதி..ரி.ஜெயவதனி |
| **மொழிச் செவ்விதாக்கம்** | - | பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம் |
| **காரியாலய உதவி** | - | திருமதி . எஸ். சி.பிரியதர்சனி |
| | - | திருமதி . மங்கலிகா விஜேரத்ன |
| | - | திரு. டயஸ் அமரசிங்க |

# உள்ளடக்கம்

**விடயம்** **பக்கம்**


பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iii
பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iv
ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துவதற்கான அறிவுரைகள் v
கலைத்திட்டக் குழு vi

7.1.0 பாடத்திட்டம்
7.1.1 அறிமுகம் 01
7.1.2 தேசிய கல்வி இலக்குகளும் அடிப்படைத் தேர்ச்சிகளும் 02
7.1.3 கற்றல் - கற்பித்தல் முறை 05
7.1.4 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் 06
7.1.5 கணிப்பீடும் மதிப்பீடும் 08
7.1.6 பாடத்திட்டத்தின் நோக்கம், தேர்ச்சிகள் 09
7.1.7 பாடத்திட்டம் 10

7.2.0 பாடத்திட்ட செயற்பாடுகள்
7.2.1 கற்றல் கற்பித்தல் முறை - விளக்கம் 21

7.3.0 கணிப்பீடும் மதிப்பீடும்
7.3.1 கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம் 79

# பாடத்திட்டம்

# சைவநெறி

# தரம் -07

## 7.1.1 அறிமுகம்

விஞ்ஞான விருத்தியும் பொருளாதார மாற்றமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், மாணவர்களின் வாழ்வில் குறுக்கிடும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கத்தக்க ஆளுமையுள்ளவர்களாக்குவது கல்வியில் கடமையும் பொறுப்புமாகும். மாணவர்களை ஆளுமையுள்ளவர்களாக வளர்ப்பதில் சமய பாடம் முக்கிய பங்கினை வகிக்கிறது. சமயம் ஒரு வாழ்க்கை நெறி. மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கான நெறிமுறைகளையும் பண்புகளையும் அது அமைத்துத் தருகின்றது.

மனித வாழ்வில், சமயம் வகிக்கின்ற முக்கியத்துவம் உணரப்பட்டமையாலேலே சைவநெறி இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக இடம் பெற்று வருகின்றது. அத்துடன்,2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கலைத்திட்டத்தில் இப்பாடம், கட்டாய பாடங்கள் ஐந்தினுள் ஒன்றாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சைவநெறி பாடத்தினூடாக மாணவர்களின் அறிவு, திறன்,மனப்பாங்கு மட்டுமன்றி,சமய அடிப்படையில் வையத்துள் வாழ்வாங்கு வாழும் திறனை விருத்தி செய்யக் கூடிய ஒழுக்கம், பண்பாடு முதலான ஆளுமைப் பண்புகளும் ஆன்மீகப் பண்புகளும் விருத்தி செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் சமய அபிமானம், சமய நம்பிக்கை,சமய உணர்வுகள் என்பன வளர்க்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2016 இலிருந்து நடைமுறைக்கு வரும் இக்கலைத்திட்டமானது, நடைமுறை வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படையான தேர்ச்சிகளை வழங்கி, மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதற்குச் சமயக் கல்வியைப் பயன்படுத்துவதைப் பிரதான நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன்,

- இறைசிந்தனை
- சமய நம்பிக்கை
- சமய ஒழுகலாறுகளும் விழுமியங்களும்
- சமய இலக்கியங்களும் தத்துவங்களும்
- சமயமும் சமூக நடைமுறைகளும்
- சமய சமரசம்

முதலான விடயங்களையும் உள்ளடக்குவதாக இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டத்தில் மாணவர்கள் அடையவேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய தேர்ச்சிகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள ஆசிரியர்கள் தம்மாலான ஒத்துழைப்பபை வழங்க முன்வர வேண்டும்.

## 7.1.2 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலம் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்கு தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போஷிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*தேசிய கல்விச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கை (2003)*

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்:**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை.

| | | |
|---|---|---|
| எழுத்தறிவு | : | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம். |
| எண்ணறிவு | : | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்துதல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்குமுறையாக அளத்தல். |
| சித்திர அறிவு | : | கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும். |
| தகவல் தொழில் நுட்பத் தகைமை | : | கணனி அறிவு கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்துதல். |

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வு சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்:**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்.

| | | |
|---|---|---|
| சமூகச் சூழல் | : | தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை. |

**உயிரியல் சூழல்** : வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதீகச் சூழல்** : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருட்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு, நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv)** **வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.



**(v)** **சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும், உள்வாங்கலும்.

**(vi)** **ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்:**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுனர் போட்டிகள், ஓய்வு நேர பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மன எழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**(vii)** **கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்:**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்துக்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

### 7.1.3 கற்றல் - கற்பித்தல் முறை

கற்றல் என்பது வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதாகும். கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவ மட்டம், பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது. பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில் மாணவரிடம் உருவாக்கப்படும் கற்றல் பற்றிய கட்டுருவாக்கவியல் சிந்தனையில் உருவாகும் புதிய கருத்துக்கள், விடயங்கள் போன்றன பற்றித் தாமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலை, மாணவர்களிடம் கட்டியெழுப்புவதே இதன் பிரதான அடிப்படை நோக்கமாகும்.

மாணவர்களது வாழ்வியலுக்குத் தேவையான ஆக்கத்திறன், கற்பனைத்திறன், தொடர்பாடல் திறன் முதலானவற்றையும் ஒழுக்கம், விழுமியம், ஆன்மீகம் என்பன சார்ந்த பண்புகளையும் விருத்தி செய்யக் கூடிய ஒரு கற்றல் முறையாகவும் இது அமைந்துள்ளது. குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினூடாக மாணவர் நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான மாற்றமொன்றை இலக்காகக் கொண்டு தேர்ச்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சைவசமய பாடத்தைப் பொறுத்தவரை முக்கியமாக எதிர்பார்ப்பது, மனப்பாங்கு விருத்தியும் நடத்தை மாற்றமுமாகும். அதனை ஏற்படுத்த ஓர் இலகு வழியாக தேர்ச்சி மையக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை அமைந்துள்ளது.

தேர்ச்சி மையக் கல்வியில் ஆசிரியரது வகிபாகம் தெளிவானதொரு மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. தாம் பெற்றிருக்கும் அறிவை மாணவர்களுக்கு அப்படியே ஒப்புவிப்பதன் மூலம் அறிவை இடமாற்றம் செய்பவராக விளங்கிய ஆசிரியரின் செயன்முறை மாற்றப்பட வேண்டியதொன்றாகும். தேர்ச்சியை மையமாகக் கொண்டமைக்கப்பட்ட சைவநெறி பாடத்திட்டத்தில், சமயம் சார் செயன்முறை அனுபவங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், இங்கு மாணவரின் செயற்பாடு, பங்கு பற்றல் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடையவேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்தபட்ச அடைவு மட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்யவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். அத்துடன் மாணவரைச் சரியாக இனங்கண்டு, கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவு மட்டத்தை எய்துவதற்கு வழி காட்டுவது ஆசிரியரது கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஆரம்பத்திலேயே மாணவரிடம் விருப்பு, வெறுப்பு, எதிர்பார்ப்பு என்பவற்றை ஏற்படுத்த வேண்டும். இங்கு விருத்தி செய்து கொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படுவது அவசியமாகும். இதற்குப் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்களைக் கேட்டல், அட்டைகளைக் காட்சிப்படுத்தல், திருமுறைப்பாடல்கள், தோத்திரப்பாடல்கள் என்பவற்றைப் பாடச் செய்தல், ஓதச் செய்தல், ஒளி, ஒலி நாடாக்கள் என்பவற்றைப் பயன்படுத்துதல், செய்து காட்டல் முதலானவை அவற்றுட் சிலவாகும்.

சைவநெறி வாழ்வியலுடன் தொடர்புடைய ஒரு பாடமாகும். அதனால், கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஊடாக மாணவரிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆதலால், ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை நடத்துவதற்காகத் திறந்த உள்ளத்துடனும் போதிய திட்டமிடலுடனும் தயாராக வரவேண்டும். இங்கு மாதிரிகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. தமது தற்றுணிவுக்கேற்ப மாதிரிகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் உரிமையுடையோராவர்.

### 7.1.4 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

சமயக் கல்வி கற்றல் - கற்பித்தல் தொடரப்பாக பாடசாலையிலும் அயலிலும் கிடைக்கின்ற பௌதிக வளங்களையும், மனிதவளங்களையும் உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலையையும் திட்டமிட்டு செயற்படுத்துவது அவசியம்.

சைவ சமய வழிபாட்டு முறைகளுக்கும், சமயம் சார்ந்த நடவடிக்கைகளுக்குமென பாடசாலைக் கொள்கை இருத்தல் அவசியம்.

சமயக் கல்வியின் அவசியத்தை, தகுந்த ஆதாரங்களுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும் எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்களின் உதவிகளைப் பெற்று கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ளலாம்.

சைவசமயத்தைக் கற்பிப்பதற்கு, பாடசாலையில் வளப் பற்றாக்குறை ஏற்பட்டால் அதனை நிவர்த்தி செய்வதற்குப் பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் முதலானோரதும் சமய நிறுவனங்களதும் ஒத்துழைப்புக்களைப் பெறலாம்.

மேற்படி கொள்கைகளை நடைமுறைபடுத்துவதற்கும், ஆற்றல்மிக்கோரை உருவாக்குவதற்கும், சமயக் கல்வியையும் அதன் பாரம்பரியத்தையும் வளர்த்தெடுப்பதற்க்குப் பொருத்தமான பின்னணியைப் பாடசாலைகளில் உருவாக்கத்தக்க வகையில், பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இசைவுபடுத்தப்படல் அவசியமாகும்.

சைவநெறிப் பாடத்தினூடாக, புதிய ஆக்கபூர்வமான சிந்தனையின் பால் வழிப்படுத்தப்படும் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பாடசாலை வேலைத்திட்டத்தை அமைத்துக் கொள்ளல் பொருத்தமுடையதாகும். இப்பாடத்திட்டத்தை பாடசாலையில் அமுலாக்கும்போது சைவசமய பாரம்பரியங்களைப் பின்பற்றும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைக்கலாம்.

- பாடசாலையில் தினசரிப் பிரார்த்தனைகள், வெள்ளிக்கிழமை பிரார்த்தனை என்பவற்றுக்கு ஏற்ற வசதிகள் அளித்தலும், மாணவர் அனைவரும் கலந்து கொள்ள வழிவகை செய்தலும்
- ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் நற்சிந்தனை கூற இடமளித்தல்
- வகுப்பறையில் சுவாமிப்படங்களை வைத்து வழிபட ஊக்குவித்தல்
- பாடசாலைக்கு அண்மையிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபட வழிப்படுத்தல்
- சமய தீட்சை வழங்கல்
- குருபூசை, பாடசாலைச் சமய விழா,சமயப் பேச்சு, பண்ணிசை, நாடகப்போட்டி முதலானவற்றினை நடத்த ஒழுங்கு செய்தல்.
- சமய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- மாணவரின் ஒத்துழைப்புடன் கூட்டாகச் செயற்படக் கூடிய சைவசமய மன்றங்களை அமைத்து நடத்தல்
- சமயம் தொடர்பான கல்விக் கண்காட்சிகளை வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் நடத்த ஒழுங்கு செய்தல்
- பாடவிடயம் தொடர்பான முக்கிய இடங்களுக்கு வெளிக்களச் சுற்றுலாக்களையும் திட்டமிட்டு, சரியாக நிறைவேற்றுதல்.
- ஒப்படைகள், செயற்றிட்டங்கள், புத்தாக்கம் போன்றவற்றில் ஈடுபட மாணவரை ஊக்குவித்தல்
- வெவ்வேறு தலைப்புக்களில் திட்டமிடப்பட்ட விவாதங்கள், உரையாடல்கள் போன்றவற்றை நடத்துதல்

- சமயக் கருத்தரங்குகள், சமய விழாக்கள் என்பவற்றில் பங்கு கொள்ள ஊக்குவித்தல் மாணவரின் பல்வேறு திறன்களும், மனப்பாங்குகளும் விருத்தியடையக் கூடிய வகையில் இவ்வாறான செயற்பாடுகளை வழங்கலாம்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கைகள், வேலைத்திட்டங்ளிலிருந்து சற்று விலகி, பாடசாலைக்கெனச் சிறப்பான கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். அதனை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காகத் தகைமை வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியரை ஈடுபடுத்தலும் பயனுறுதிமிக்க நேரமுகாமையும் மிக அவசியம்.

ஒவ்வொரு சமய பாட ஆசிரியரும் தமது வகுப்பில் பயிலும் மாணவர்களைக் கீழ்வரும் நற்பழக்கவழக்கங்களை உடையவர்களாக ஆக்குதல் வேண்டும்.

- கடவுள் பக்தி
- தாய், தந்தை, குரு ஆகியோரைத் தினம் தினம் வணங்குதல்
- மூத்தோரிடம் மரியாதை
- ஒழுக்கம்
- தியாகமும், தொண்டும்
- சமய அறிவில் ஆர்வம்
- சைவ தர்ம நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல்

மாணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குவதை ஆசிரியர்கள் இலட்சியமாகக் கொண்டு செயற்படல் வேண்டும். பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்துவதனால் அடுத்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட புத்தாக்கம் புரிவோரையும் மனிதப் பண்புள்ளவர்களையும் குறைவின்றி உருவாக்கலாம்.

### 7.1.5 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினூடாக, மாணவர் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடைந்துள்ளனரா என்பதை அறிவதற்கு ஏற்ற இலகுவான வழிமுறைகளாக கணிப்பீடும் மதிப்பீடும் அமைந்துள்ளது.
மாணவரின் நடத்தைசார் பண்புகள், சமய வழிபாடுகளில் அவர்கள் கொண்டுள்ள அக்கறை, சமய, சமூக செயற்பாடுகளில் காட்டும் ஆர்வமும் ஈடுபாடும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் போது வெளிக்காட்டும் தன்மை, பங்கேற்கும் தன்மை என்பன கணிப்பீடு செய்யப்பட வேண்டும். இவற்றை முறை சார்ந்த வழிகளில் வகுப்பறைக்கு உள்ளேயும், வெளியேயும் கணிப்பீடு செய்ய முடியும்.

மதிப்பீட்டினைப் பல வழிகளில் மேற் கொள்ள முடியும். பாடம் தொடர்பான மதிப்பீடு பாட அலகின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது, வாய்மொழிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை, செயற்றிட்டம் போன்ற செயற்பாடுகளினூடாக மேற் கொள்ள முடியும். தவிர, தவணை இறுதியில் ஒப்படை, செயற்றிட்டங்களை வழங்குதல் என்பவற்றிறூடாகவும் மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியும்.

மேலும், திருமுறைகள் தோத்திரப்பாடல்கள் பாடும் போது, மாணவர் பிழையற மனனம் செய்து, உச்சரிப்புத் தெளிவு, பண், இசை என்பவற்றுடன் சரியான நிலையில் நின்று பாடுகிறார்களா என்பதையும் கணிப்பீடு செய்ய வேண்டும். அவ்வாறே, ஆலய வழிபாடு, அங்கு செய்யப்படும் அட்டாங்க,



| தவணை | தேர்ச்சி | தேர்ச்சி மட்டங்கள் | பாடவேளை | மொத்தப் பாடவேளை |
|---|---|---|---|---|
| தவணை -1 | 1.0 | 1.1 | 02 | 16 |
| | | 1.2 | 04 | |
| | | 1.3 | 06 | |
| | 3.0 | 3.1 (1,2, ஆம் பாடல்) | 04 | |
| தவணை -2 | 1.0 | 1.4 | 02 | 25 |
| | | 1.5 | 04 | |
| | 2.0 | 2.1 | 03 | |
| | | 2.2 | 02 | |
| | 3.0 | 3.1(3,4,5,6 ஆம் பாடல்) | 06 | |
| | 4.0 | 4.1 | 02 | |
| | 5.0 | 5.1 | 04 | |
| | | 5.2 | 02 | |
| தவணை -3 | 3.0 | 3.1 (7,8ஆம் பாடல்) | 02 | 19 |
| | 6.0 | 6.1 | 03 | |
| | 7.0 | 7.1 | 04 | |
| | 8.0 | 8.1 | 03 | |
| | 9.0 | 9.1 | 06 | 60 |
| | 10.0 | 10.1 | 01 | |

## 7.1.6 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

01. தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்தல்.
02. பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்ளல்.
03. திருமுறைப் பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுதல்.
04. ஆலயங்களில் சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுதல்
05. சைவசமய குரவர்கள்,சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுதல்
06. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி கருத்துக்களை வெளிப்படுத்துதல்.
07. நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுதல்.
08. ஈழத்து சைவசமய வளர்ச்சியின் தொன்மையும் வரலாறும் பற்றி அறிந்து வெளிப்படுத்துதல்
09. ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளல்.
10. பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிக்கு மதிப்பளித்தல்.



## தரம் 7 க்குரிய தேர்ச்சிகள்

1.0 தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடிப்பர்.
2.0 பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர்.
3.0 திருமுறைப் பாடல்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்
4.0 ஆலயங்களில் சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவர்
5.0 சைவ சமய குரவர்கள், சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவர்
6.0 சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி கருத்துக்களை வெளிப்படுத்துவர்.
7.0 நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவர்.
8.0 ஈழத்து சைவசமய வளர்ச்சியின் தொன்மையும் வரலாறும் பற்றி அறிந்து வெளிப்படுத்துவர்
9.0 ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வர்.
10.0 பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிக்கு மதிப்பளிப்பர்.

## 7.1.7 பாடத்திட்டம் சைவநெறி - தரம் - 07

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1.0 தமது அன்றாட வாழ்க்கையில் இறை சிந்தனையுடன் சமய ஒழுகலாறுகளை கடைப்பிடிப்பர். | 1.1 கடவுளின் மேலான தன்மையையும் (பரத்துவம்) கருணைத்திறத்தையும் அறிந்து இறைசிந்தனையில் ஈடுபடுவர். | கடவுள் கருணையானவர் என்பதைச் சமயக் கதைகள் மூலமாக விளங்குதல்<br>• **தாயுமானவர் கதை** (இறைவன் தாயாக வந்து அருள்பாலித்த சம்பவக் கதைகள்) | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• கடவுள் கருணையுள்ளம் கொண்டவர் என்பதனை அறிவர்.<br>• தாயுமானவர் கதைமூலம் இறைவனின் கருணை உள்ளத்தை உணர்வர்.<br>• இதனை மற்றோருக்கும் எடுத்துக் கூறுவர்.<br>• இறைவன் மனித உருவில் காட்சியளிப்பார் எனவே மனிதர்களை மதித்து நடப்பர் | 02 |
| | 1.2 தமது வாழ்வியலில் நாளாந்த செயற்பாட்டில் இறைசிந்தனையுடன் ஈடுபடுவர் | • **பாடசாலையில் சைவம்** பாடசாலையில் தினந்தோறும் கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள்<br>• காலைப்பிரார்த்தனை விசேட தினங்களில் பின்பற்றப்பட வேண்டியவை<br>• வெள்ளிக்கிழமைப் பிரார்த்தனை<br>• பஞ்சபுராணம் ஓதுதல்<br>• நால்வர் குரு பூசை<br>• நவராத்திரி விழா | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• தினந்தோறும் பாடசாலையில் காலைப் பிரார்த்தனையில் ஈடுபடுவர்.<br>• காலைக் கூட்டங்களின் போதும் நிகழ்வுகளின் போதும் திருமுறைப் பாடல்களை ஓதுவர்.<br>• குரு பூசைத் தினங்களை பாடசாலைகளில் கொண்டாடுவர்.<br>• நவராத்திரி விரதத்தினை அனுஷ்டிப்பர்.<br>• பாடசாலைகளில் சைவசமயச் செயற்பாடுகளுடாக சைவசமய பண்புகளை வளர்த்துக் கொள்வர்.<br>• பாடசாலையில் நடைபெறும் ஏனைய சமய நிகழ்வுகளுடாக பிற சமயங்கள் கூறும் பண்புகளை விளங்கி மதிப்பளிப்பர் | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 1.3 சைவ சமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் பின்பற்றும் முறையினை வெளிப்படுத்துவர். | • **பாடசாலையில் ஒழுங்கு**<br>- பாடசாலையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சிறந்த ஒழுக்கமே உயர்ந்த ஆன்மீகம் என்பதை அறிவர்.<br>• சிறந்த பிரசையாக மிளிர்வதற்கு பாடசாலையில் மேற்கொள்ளப்படும் ஒழுங்குவிதிகளுக்கு மதிப்பளிப்பர்.<br>• பாடசாலைகளினூடாக சைவசமய ஒழுகலாறுகள் வழக்காறுகளை அறிந்து பின்பற்றுவர்<br>• பாடசாலையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளை அறிந்து கடைப்பிடிப்பர். | 02 |
| | | • வாழ்வியல் நற்பண்புகள்<br>- பணிவு, நன்றி மறவாமை,<br>- நீதி, நேர்மை, பொறுமை, பஞ்சமா பாதகங்களைத் தவிர்த்து நடத்தல்,<br>- சகோதரத்துவம் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• வாழ்க்கையில் ஜெயிக்க நற்பண்புகள் தேவை என்பதை அறிவர்.<br>• வாழ்வியல் நற்பண்புகளை அறிந்து அவற்றைப் பட்டியல்ப்படுத்துவர்.<br>• பணிவு, நன்றி மறவாமை நீதி, நேர்மை, பொறுமை பஞ்சமாபாதகங்களைத் தவிர்த்து நடக்கப்பழகுவர்.<br>• சமூகத்தில் அனைவருடனும் சகோதரத்துவத்துடன் பழகுவர்.<br>• வாழ்வியல் நற்பண்புகள் பற்றி நண்பர்களுடன் கலந்துரையாடுவர். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 1.4 வாழ்வியல் மேம் பாட்டிற்காக சடங்கு களை அறிந்து அவற்றை முறைப்படி கடைப் பிடிக்கும் முறையை இனங்காட்டுவர். | • **புதுமனை புகுதல்**<br>- மனையடி சாஸ்திரத்தின் அடிப்படையில்<br>- பதுமனை புகுதலில் இடம் பெறும் சடங்குகளும் அவற்றின் முக்கியத்துவமும்<br>- நிலம் தெரிதல், அத்திபாரம் இடுதல், நிலைவைத்தல், வளை வைத்தல்,மனைபுகுதல் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• புதுமனை புகும் போது இடம்பெறும் கிரியைகளை அறிவர்.<br>• புதுமனை புகுதலின் போது கிரியைகளின் முக்கியத்துவம் குறித்து விவரிப்பர்.<br>• புதுமனை புகுதலில் செய்யப்படும் சடங்குகளின் பொருளைக் கேட்டறிந்து கொள்வர்<br>• புதுமனை புகுதலில் நடைபெறும் சடங்குகளில் மனையடி சாஸ்திரத்தின் அவசியம் பற்றி அறிந்து கொள்வர்<br>• கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவர். | 02 |
| | 1.5 வாழ்வின் மேம்பாட்டில் விரதங்கள் பண்டிகைகள் வகிக்கும் முக்கியத்துவத்தை விளங்கி அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவர் | • **விரதங்கள்**<br>- நாள் விரதங்கள் -<br>- வெள்ளிக்கிழமை விரதம்<br>- செவ்வாய்க்கிழமை விரதம்<br>- மாத விரதங்கள்<br>- தைப் பூசம்<br>- மாசி மகம்<br>- **பண்டிகைகள்**<br>- தைப்பொங்கல் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• விரதங்களின் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றினை அனுட்டிப்பர்.<br>• நாள் விரதங்களையும் மாத விரதங்களையும் அறிவர்.<br>• விரதங்களை அனுட்டிக்கும் போது விரத நியதிகளைக் கடைப்பிடிப்பர்.<br>• ஆன்மீக மேம்பாட்டிற்கு விரதம் உதவுகின்றது என்பதை உணர்வர்.<br>• பண்டிகைகளின் முக்கியத்துவத்தினை அறிந்து கடைப்பிடிப்பர்.<br>• தைப்பொங்கல் பற்றி அறிந்து அதனை கொண்டாடுவர்.கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவர். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2.0 பக்தி, இறை நம்பிக்கையின் சாதனம் என்பதை உணர்ந்து அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர். | 2.1 சமய நூல்களையும் அவற்றின் பக்தி வெளிப்பாடுகளையும் அறிந்து வெளிப்படுத்துவர். | • **திருமுறை வைப்பு**<br>- திருமுறை வைப்பு முறையும் ஆசிரியர்களும் - திருமுறை பொருள் மரபு அறிமுகம் | • **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• திருமுறை என்றால் என்ன என்பதை அறிவர்.<br>• திருமுறைகளின் வைப்பு முறையையும் அதன் ஆசிரியர்களையும் அறிந்து அதற்கு மதிப்பளிப்பர்.<br>• திருமுறைகளின் பொருள் மரபின் அறிமுகத்தினைப் பெறுவர்.<br>• திருமுறைகள் வெளிப்படுத்தும் பக்தி பற்றிய கருத்துக்களை இனங்காண்பர்.<br>• திருமுறைகளின் சிறப்பு பற்றிய விடயங்களைத் தேடியறிவர்.<br>• பன்னிரு திருமுறைகளின் தொகுப்பை அட்டவணைப்படுத்திக் காட்டுவர் | 03 |
| | 2.2 நாயன்மாரின் வரலாறுகளினூடாக அவர்களது இறை நம்பிக்கையையும், பக்தி உணர்வையும் அறிந்து அவற்றின் வழி ஒழுகுவர், பக்தியின் சிறப்பை எடுத்துரைப்பர் | • **காரைக்கால் அம்மையார்**<br>வரலாற்றுக்கதையினூடாக அவரது பக்தி வெளிப்பாடுகளை போற்றுதல் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• காரைக்காலம்மையாரின் சிவத்தொண்டினை விவரிப்பர்.<br>• காரைக்காலம்மையாரின் நற்பண்புகளை எடுத்துரைப்பர்.<br>• காரைக்காலம்மையாரின் தொண்டுகளைச் செய்து தாமும் சைவசமயத்தை மேன்மையுறச் செய்யும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்.<br>• காரைக்காலம்மையாரின் பணிகளின் முக்கியத்துவத்தினை ஏனையோருக்கும் எடுத்துரைப்பர்.<br>• இறைவனை வழிபடுவோருக்கு இறைவன் அருள்புரிவான் என்பதை எடுத்துக் கூறுவர். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 3.0 திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர். | 3.1 பஞ்ச புராணத்தையும், தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர். | • **பஞ்சபுராணமும் தோத்திரப்பாடல்களும்**<br>பஞ்சபுராணங்கள் ஓதும் ஒழுங்கு முறையை அறிதல், பாடல் பாடியவர், தலம், பண், பாடல் அடங்கியுள்ள திருமுறை ஆகியவற்றை அறிதல்<br>**1. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்**<br>“நிரைகழலரவம்....”<br>“விருதுகுன்றமா...”<br><br>**2.திருநாவுக்கரச நாயனார் தேவாரம்**<br>“மாதர் பிறைக் கண்ணி...”<br>“நங்கடம்பனை...”<br><br>**3.சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்**<br>“ நத்தார் படை... ”<br>“பொன்னார் மேனியனே...”<br><br>**4.மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்**<br>“ அம்மையே அப்பா...”<br>“முக்திநெறி அறியாத...”<br><br>**5.திருவிசைப்பா** - 9- திருவாலியமுதனார்<br>“ அன்ன நடையார்...”<br><br>**6.திருப்பல்லாண்டு**<br>“ குழலொலி யாழொலி...”<br>**7.பெரியபுராணம்**<br>“ வேதநெறி தழைத்தோங்க...”<br>**8.திருப்புகழ்**<br>“ இறவாமல் பிறவாமல்...” | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• தேவாரங்களினதும் தோத்திரப் பாடல்களினதும் சிறப்பினை அறிவர்.<br>• தேவாரங்களையும் தோத்திரங்களையும் மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.<br>• எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக தேவாரத்தினையும் தோத்திரத்தினையும் எழுதுவர்.<br>• பஞ்சபுராணம் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் பாடும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பர்.<br>• பாடல்களை பண்ணோடு பாடுவர்<br>• வரிக்கிரமமாக, பிழைகளின்றி இறைசிந்தனையுடன் தோத்திரப்பாடல்களை பாடுவர்<br>• பஞ்ச புராணத்தில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்பன அடங்கும் என்பதை அறிந்து கொள்வர்.<br>• முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும் என்பதை விவரிப்பர்.<br>• பஞ்ச புராணப் பாடல்களின் பொருள் விளக்கத்தையும் அவைகள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பர். | 12 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 4.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவர் | 4.1 ஆலய வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் பேணும் முறையை எடுத்துரைப்பர் | • **ஆலய வழிபாடு**<br>(வழிபாட்டு முறைகளை விளக்குதல்) | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஆலயம் என்பதன் பொருளை விளக்குவர்.<br>• ஆலய வழிபாட்டின் அவசியம் பற்றி விபரிப்பர்.<br>• ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தினை அறிவர்.<br>• பூசைப் பொருட்கள் எடுத்துச் செல்லும் முறை பற்றி அறிந்து அவற்றைத் தம் வாழ்க்கையில் கடைப்பீடிப்பர்.<br>• ஆலயத்தில் தொண்டு செய்வதன் அவசியத்தை அறிவர்.<br>• தத்தம் ஊர் ஆலயங்களில் தம்மாலான தொண்டுகளினைச் செய்வர்.ஆலயங்களில் தொண்டு செய்வதன் அவசியத்தினை ஏனையோருக்கும் எடுத்துரைப்பர்.<br>• ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதற்கு ஏற்ப வழிபாடுகளில் ஈடுபடுவர். | 02 |
| 5.0 சைவ சமய குரவர்கள்,சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன் மாதிரியாகக் கொணடு பின்பற்றுவர் | 5.1 சமய குரவர் வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்ட ஒழுகும் முறையை அறிந்து கூறுவர் | • **சமய குரவர் நால்வரின் சமயத் தொண்டுகள்**<br>- நாயன்மார்களின் வரலாற்று சுருக்கங்கள்<br>- சைவசமயப் பணிகள் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சமய குரவர்கள் நால்வரும் இறைவன் அருள் பெற்றவர்கள் என்பதை அறிந்து கொள்வர்.<br>• சமய குரவர்கள் நால்வரும் இறையருளுடன் அற்புதங்களைச் செய்து, மக்களின் துன்பத்தை நீக்கி இறைபக்தியை வளர்த்தனர் என்பதை கதைகளுடாக விவரிப்பர்.<br>• சமய குரவர்களின் குரு பூசைத்தினங்களைக் கொண்டாடி அவர்களின் பணிகளுக்கு மதிப்பளிப்பர்.<br>• சமய குரவர்கள் பாடிய தேவாரப் பதிகங்களை மனனம் செய்து பாடுவர்.<br>• சமய குரவர்களின் பணிகளை தாம் வாழும் சூழலில் முன்னெடுத்துப் பணிகளில் ஈடுபடுவர். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 5.2 ஈழத்தில் சமயம் வளர்த்த பெரியார்களையும் அவர்களது பணிகளையும் அறிந்து அவர்களுக்கு மதிப்பளிக்கும் முறையை விளக்குவர். | • **சேர் பொன் இராமநாதன்**<br>- வரலாற்று அறிமுகம்<br>- சமயப் பணிகள் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சேர்.பொன். இராமநாதன் அவர்களின் வாழ்க்கைப் பின்னணியை அறிவர்.<br>• அவரின் சமயப் பணிகளை அறிந்து போற்றுவர்.<br>• தம்மாலான சமய, சமூகப் பணிகளை செய்ய முன் வருவர்.<br>• இன்றையச் சூழலிலும் சமூக. சமய பணியின் அவசியம் குறித்து நண்பர்களுடன் கலந்துரையாடுவர். | 02 |
| 6.0 சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி கருத்துக்களை வெளிப்படுத்துவர். | 6.1 சைவ சித்தாந்தம் தொடர்பாக அடிப்படை விளக்கம் பெற்று தத்துவத்தின் அடிப்படை அம்சங்களை இனங்காண்பர், அவை தொடர்பாக விளக்கம் பெறுவர். | • **பதி**<br>- பதி அறிமுகம்<br>- பதி உண்மை<br>- பதி இலக்கணம்<br>- பதிக்கும் பசுவுக்கும் உள்ள தொடர்பு<br>(எளிமையான அறிமுகம் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களில் பதியும் ஒன்று என்பதை அறிவர்.<br>• பதியின் இருநிலைகளைக் கூறுவர்.<br>• பதி உண்மை என்பதை உணர்வர்.<br>• பதிக்குரிய இலக்கணங்களை அறிந்து போற்றுவர்.<br>• பதிக்கும் பசுவுக்கும் இடையிலுள்ள தொடர்பினை அறிவர்.<br>• பதியின் சிறப்பினை அறிந்து நிதமும் வழிபாட்டில் ஈடுபடுவர். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 7.0 நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவர். | 7.1 நாட்டார் வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் கடைப்பிடிக்கும் முறைகளை எடுத்துரைப்பர். | • **நாட்டார் வழிபாடு** (ஆகமம் சாரா வழிபாடு) - **பெண் தெய்வங்கள்** -<br>- காளி<br>- கண்ணகியம்மன் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஆகமம் சாரா வழிபாட்டின் வரைவிலக் கணத்தைக் கூறுவர்<br>• ஆகமம் சாரா வழிபாட்டக்குரிய தெய்வங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவர்<br>• ஆகமம் சாரா வழிபாடு இன்று வரை நிலைத்து நிற்பதற்கான காரணத்தை ஏற்றுக் கொள்ளுவர்.<br>• ஆகமம் சாரா வழிபாட்டினால் கிடைக்கும் பயன் களை விளக்குவர்.<br>• நாட்டார் வழிபாடு ஆகமம் சாரா முறையில் இடம்பெறும் என்பதை அறிவர்.<br>• கண்ணகியம்மன் வழிபாடு இடம்பெறும் இடங்களைக் குறிப்பிடுவர்.<br>• காளி, கண்ணகியம்மன் வழிபாட்டு முறைகளை அறிந்து போற்றுவர்.<br>• தாமும் அவ்வழிபாடுகளில் ஈடுபடுவர்.கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவர். | 04 |
| 8.0 ஈழத்துச் சைவமரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி,உரிய ஆதாரங்களுடன் முன்வைப்பர், ஈழத்தில் சைவத்தின் தொன்மை யையும்,வரலாற்றுச் சிறப்பையும் அறிதல் | 8.1 ஈழத்துச் சைவசமய வளர்ச்சியின் தொன்மை, வரலாறு என்பவற்றை ஆதாரத்துடன் முன்வைப்பர். | • **ஈழத்து சைவ சமய வளர்ச்சியின் தொன்மையும் வரலாறும்**<br>- அறிமுகம் | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஈழத்தின் சமய வரலாற்றுத் தொன்மையை அறிய உதவும் ஆதாரங்களைப் பட்டியற்படுத்துவர்.<br>• ஈழத்தில் தொன்மையான மதம் இந்துசமயம் என்பதை அறிந்து போற்றுவர்.<br>• இந்து மதத்தின் தொன்மை பற்றி நண்பர்களுடன் கலந்துரையாடுவர். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 9.0 ஈழத்து சைவ மரபுகளையும், தாற்பரியங்களையும் அறிந்து அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வர். | 9.1 ஈழத்துச் சைவ ஆலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பர் | • **விநாயகர் ஆலயம்**-<br>மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்<br>• **சிவாலயம்**-<br>நகுலேஸ்வரம்<br>• **அம்மன் ஆலயம்**-<br>- தெல்லிப்பளை துர்க்கையம்மன்<br>- கொத்துக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்<br>• **முருகன் ஆலயம்**-<br>- சித்தாண்டி முருகன் ஆலயம்<br>- பேராதனை குறிஞ்சிக்குமரன் ஆலயம் | •**இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவர்.<br>• நகுலேஸ்வர ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவர்.<br>• தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தின் ச சிறப்புக்களை அறிந்து போற்றுவர்.<br>• மட்டக்களப்பு கொத்துக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவர்.<br>• சித்தாண்டி முருகன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவர்.<br>• பேராதனை குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவர்.<br>• தம் வாழ்க்கையில் இவ்வாலயங்களுக்கு தலயாத்திரை செல்ல வேண்டும் என்ற உணர்வினைப் பெறுவர். | 06 |
| 10.0 பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிக்கு மதிப்பளிப்பர். | 10.1 பிற சமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து கொள்வர், அவை பற்றி விளக்குவர். | • **இலங்கையிலுள்ள சமயங்கள் பற்றிய பொது விளக்கம்** | • **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இலங்கையிலுள்ள அனைத்து மதங்கள் பற்றியும் அறிந்து அவைகள் கூறும் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பர்.<br>• சமயங்கள் கூறும் மனித விழுமியங்கள் மற்றும் விழாக்கள், விசேட தினங்கள் பற்றியும் அறிந்து அதற்கேற்ப அவற்றுக்கு மதிப்பளிப்பர். | 01 |

# செயற்பாடுகள்

## கற்றல் கற்பித்தல் முறைகள் - விளக்கம்

**தேர்ச்சி 1.0 :** **தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறு களைக் கடைப்பிடிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 :** கடவுளின் மேலான தன்மையும் (பரத்துவம்) கருணைத்திறத்தையும் அறிந்து இறைசிந்தனையில் ஈடுபடுவர்.

**செயற்பாடு :** "கடவுளின் கருணைத்திறனை அறிந்து அவரைப் போற்றி வழிபாடு செய்வோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- கடவுள் கருணை உள்ளம் கொண்டவர் என்பதனை அறிவர்.
- தாயுமானவர் கதை மூலம் இறைவனின் கருணைத்திறனை அறிந்து இறைவனைப் போற்றுவர்.
- இறைவனே மேலானவன் என்ற பரத்துவ தத்துவத்தினை அறிவர்.
- இறைவனே தாயும் தந்தையுமாவார் என்பதை எடுத்துக் கூறுவர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**
- திருமுறைப் பாடல்களில் இறைவனை தாயாகவும் தந்தையாகவும் போற்றும் பதிக அடிகளைக் கேட்டறியுங்கள்.
- புராணக் கதைகளில் வரும் இறைவனின் பரத்துவத்தையும் கருணைத் திறனை யும் பற்றிய கதைகளைக் கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் குழுக்களாக இயங்குவதை மேற்பார்வை செய்யுங்கள்.
- தேவைக்கேற்ப தகுந்த ஆலோசனை வழங்குங்கள்.
- குழுவினரின் அறிக்கையைச் சமர்ப்பிக்க இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்களுக்கும் கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை வழங்குங்கள். அதன்போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - "அம்மை நீ அப்பன் நீ ஐயனும் நீயே..."
  - "எல்லா உலகமும் ஆனாய் நீயே..."
  - "பால் நினைந்தூட்டும் தாயினும் சால..."
  - "தாயினும் நல்ல தலைவர்..."

  என்ற திருப்பாடல் அடிகளின் மூலம் இறைவனின் பரத்துவத்தையும், அவன் கருணைத்திறத்தினையும் அறிய முடியும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- சிவனே எங்கும் வியாபகமாக உள்ளார் என்பதை அறிவர்.
- இறைவன் தாய்போல எமக்கு உதவுபவர் என்பதை விளங்கிக் கொள்வர்.
- திருமுறைப் பாடல்கள் மூலமும் புராணக் கதைகள் மூலமும் இறைவனின் பரத்துவத்தையும் கருணைத்திறத்தினையும் அறிந்து இறைவழிபாட்டினை மேற்கொள்வர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமைன் கடதாசி, பேனா.
- மாதிரி செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 1.1:**

## மாதிரி செயற்பாட்டுப் படிவம்

**குழு- 1:**
இறைவன் உயிர்கள் மீது கருணையுள்ளவர் என்பதனை விளக்கும் புராணக்கதையினை தேடி எழுதுக.

**குழு- 2:**
“இறைவன் ஒருவனே மேலானவர” என்பதனை சமய நூல்களில் இருந்து ஆதாரம் காட்டுக.

**குழு- 3:**
(1) இறைவன் தாயாக வந்து அருள் கொடுத்த இரு சந்தர்ப்பங்களைத் தருக.
(2) ‘ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே’ என இறைவனைப் போற்றிப் பாடியவர் யார்?
(3) தாயினும் நல்ல தலைவர் என சம்பந்தர் யாரைக் குறிப்பிடுகிறார்?

**ஆசிரியருக்கானது:**
கற்றல் - கற்பித்தலின்போது, ஆசிரியர் - மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்தி பொருத்தமான நடவடிக்கை எடுங்கள்.
(1) ..........................................................................................................
(2) ..........................................................................................................
(3) ..........................................................................................................

**பெற்றோருக்கானது:**
**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**
தாமும் இறைவழிபாடு செய்வதுடன் பிள்ளையும் இறைவனின் கருணைத்திறத்தினை அறிந்து ஆலய வழிபாட்டினை மேற்கொள்ள உதவுங்கள்.

**தேர்ச்சி 1.0 :** தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறு களைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.2 :** தமது வாழ்வியலில் நாளாந்த செயற்பாட்டில் இறைசிந்தனையுடன் ஈடுபடுவர்.

**செயற்பாடு :** "பாடசாலையில் கற்றலோடு இணைந்த சமயச் செயற்பாடுகளில் ஈடுபடுவோம்."

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள் :**
- பாடசாலையில் கைக்கொள்ளப்படும் சைவப் பழக்கங்களை அறிந்து போற்றுவர்.
- பாடசாலைகளில் கொண்டாடப்படும் விசேட விழாக்களை அறிந்து கொண்டாடுவர்.
- சமய விழாக்களுக்கு மதிப்பளிப்பர்.
- பாடசாலையில் கொண்டாடப்படும் சமய விழாக்களை முன்னின்று நடாத்துவர்.
- பாடசாலையில் பெற்றுக் கொண்ட விழாக்கள் பற்றிய அனுப வத்தினை சமூகத்திலும் வெளிப்படுத்துவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- சைவப் பழக்கவழக்கங்களை மாணவர்கள் கூற இடமளியுங்கள்.
- அவை எவ்வாறு பாடசாலையில் கைக்கொள்ளப்படுகின்றன? என மாணவர் களோடு கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் குழுக்களாக இயங்குவதை மேற்பார்வை செய்யுங்கள்.
- தேவைக்கேற்ப தகுந்த ஆலோசனை வழங்குங்கள்.
- குழுவினரின் அறிக்கையைச் சமர்ப்பிக்க இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்களுக்கும் கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை வழங்குங்கள். அதன்போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - காலைப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்ளுதல்.
  - ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்துதல்.
  - வெள்ளிக்கிழமை பிரார்த்தனைகளில் பங்குகொள்ளுதல்.
  - விசேட தினங்களில் இடம்பெறும் பஞ்சபுராணம், சிவபுராணம், கூட்டுப் பிரார்த்தனை என்பவற்றில் பங்குகொள்ளல்.
  - பாடசாலையில் கொண்டாடப்படும் விழாக்களில் பங்குகொள்ளல் / முன்னின்று நடாத்துதல்.

    (உ+ம்) * நவராத்திரி விரதம்
    * மகா நோன்பு
    * ஏடு தொடக்குதல்

- பாடசாலைகளில் குருபூசைத் தினங்களை அனுஷ்டிப்பதோடு, அவற்றில் பங்குகொள்ளல் / முன்னின்று நடாத்துதல்.
  (உ+ம்) * நாயன்மார் திருவுருவங்களை வழிபடுதல்.
  * பண்ணிசை ஓதுதல்.
- பாடசாலையில் நடைபெறும் விசேட விழாக்களில் சமய நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
  (உ+ம்) * அடிக்கல் நாட்டுதல்
  * கட்டடத் திறப்பு விழா
  * பாடசாலை அபிவிருத்திக் கூட்டங்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- பாடசாலையில் கைக்கொள்ளப்படும் சமய பழக்கவழக்கத்தினை அறிவர்.
- பாடசாலையில் கொண்டாடப்படும் விசேட விழாக்களை அறிவர்.
- பாடசாலையில் கொண்டாடப்படும் சமய விழாக்களுக்கு மதிப்பளிப்பர்.
- பாடசாலையில் கொண்டாடப்படும் விழாக்களை முன்னின்று நடாத்த முன்வருவர்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:
- டிமைன் கடதாசி, பேனா
- மாதிரி செயற்பாட்டுப் படிவம்

## இணைப்பு 1.1:

## மாதிரி செயற்பாட்டுப் படிவம்

பின்வரும் அடிப்படையில் சுவரொட்டிகள் தயாரிக்கவும்.

(1) பாடசாலையில் நாள்தோறும் கடைப்பிடிக்கப்படும் சைவப் பழக்கவழக்கங்களை பட்டியற்படுத்துங்கள்.
(2) பாடசாலையில் கொண்டாடப்படும் விழாக்களை பட்டியற்படுத்துங்கள்.
(3) பாடசாலையில் விழாக்களைக் கொண்டாடுவதால், மாணவரிடத்தே ஏற்படும் நற்பண்புகளைப் பட்டியற்படுத்துங்கள்.
(4) நீங்கள் தயாரித்த சுவரொட்டிகளை வகுப்பறை, பாடசாலை அறிவித்தற் பலகைகளில் காட்சிப்படுத்துங்கள்.

(மேலுள்ள செயற்பாட்டினை குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதி எடுத்து வழங்கவும்)

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)........................................................................................................................
(2)........................................................................................................................
(3)........................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

பாடசாலையில் கைக் கொள்ளப்படும் சமய பழக்க வழக்கத்தினை வீட்டிலும் பின்பற்ற வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 :** தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் ஒழுகலாறு களைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.3 :** சைவசமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் பின்பற்றும் முறையினை வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு :** "பாடசாலையில் ஒழுங்கைப் பேணுவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- பாடசாலையின் ஒழுங்குவிதி பற்றி அறிந்து கடைப்பிடிப்பர்.
- நற்பண்புகளைக் கடைப்பிடிப்பர்.
- பாடசாலை மீதான நன்மதிப்பைப் பேணுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- பொதுவான ஒழுங்குகள் பற்றி மாணவர் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடசாலையின் ஒழுங்குகள் பற்றி மாணவர் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இவற்றினை அடிப்படையாகக் கொண்டு செயற்பாட்டினை வழங்குங்கள்.

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் குழுக்களாக இயங்குவதை மேற்பார்வை செய்யுங்கள்.
- தேவைக்கேற்பத் தகுந்த ஆலோசனை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் நாடகத்தினை முன்வைக்க இடமளியுங்கள்
- ஏனைய குழுக்களுக்கும் கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் நாடகத்தின் மூலமாக முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை வழங்குங்கள். அதன்போது கீழ்வரும் விடயங் களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - பாடசாலைக்குள்ளும், சமூகத்திலும் நற்பிரசையாக வாழ்வதற்கு ஒழுங்குகள் அவசியப்படுகின்றன.
  - பாடசாலைக்குள் நடைபெறும் செயற்பாடுகளின் மூலமாக நாம் பேணக்கூடிய நல்லொழுங்குகள் பல உள்ளன.

    (உ+ம்) (1) பாடசாலைக்கு நேரத்திற்கு வருதல்.
    (2) சுத்தம் பேணுதல்.
    (3) பாடசாலையினுள் பேணப்படும் ஒழுங்கு விதிகளுக்கு மதிப் பளித்தல்.
    (4) அதிபர், ஆசிரியர்களுக்குக் கீழ்படிதல்.
    (5) காலைக் கூட்டத்தில் பங்குகொள்ளல்.
    (6) வெள்ளிக்கிழமை, விசேட காலங்களில் இடம்பெறும் கூட்டுப் பிரார்த்தனைகளில் பங்குகொள்ளல்.
    (7) மாணவத் தலைவர்கள், மாணவர்களுடன் நட்புடன் இயைந்து நடத்தல்.
    (8) பாடசாலையை நேசித்தல்.
    (9) பாடசாலை செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபடல்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 5:**
- பாடசாலையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளை அறிவர்.
- அதிபர், ஆசிரியர்கள், மாணவர் தலைவர்கள் என்போரை மதித்து வாழ்வர்.
- பாடசாலையை நேசிப்பர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- மாதிரி செயற்பாட்டுப் படிவம்

**இணைப்பு 1.1:**

## மாதிரி செயற்பாட்டுப் படிவம்

**குழு- 1:**

(1) பாடசாலை ஒழுங்குகள் எவை என்பதைக் குறிப்பிடுங்கள்.
(2) அவற்றை வெளிப்படுத்தும் விதத்தில் நாடகம் ஒன்றினை ஆக்குங்கள்.
(3) அதனை நடித்துக் காட்டுங்கள்.

**குழு- 2:**

(1) பாடசாலை ஒழுங்குகளை கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியல் படுத்துங்கள்.
(2) அவற்றினை அடிப்படையாகக் கொண்டு நாடகப் பிரதி ஒன்றினைத் தயாரிக்குக.
(3) அதனை நடித்துக் காட்டுக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)......................................................................................................................
(2)......................................................................................................................
(3)......................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

பாடசாலை மீதான அபிமானத்தை எல்லா இடத்திலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பேணுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 :** தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறு களைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.3 :** சைவசமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் பின்பற்றும் முறையினை வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு :** ''வாழ்வியல் நற்பண்புகளை அறிந்து பேணுவோம்.''

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள் :**
- வாழ்வியல் நற்பண்புகள் என்றால் என்ன என்பதை அறிவர்.
- வாழ்வியல் நற்பண்புகளை அறிந்து அவற்றைத் தம் வாழ்வில் கடைப்பிடிப்பர்.
- நற்பண்புடையோராய் வாழப்பழகுவர்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர் தாம் அறிந்த நற்பண்புகளைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மனிதனை நல்வழிப்படுத்தும் நற்பண்புகள் பல உள்ளன.
- அவற்றைக் கடைப்பிடிப்பதால் நாம் வாழ்வில் நேரிய வழியில் செல்ல முடியும்.

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் குழுக்களாக இயங்குவதை மேற்பார்வை செய்யுங்கள்.
- தேவைக்கேற்ப தகுந்த ஆலோசனை வழங்குங்கள்.
- குழுவினரின் அறிக்கையைச் சமர்ப்பிக்க இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்களுக்கும் கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களையும், கீழ்க்காணும் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.
  - உடல், உள்ளம் என்பவற்றை தூய்மைப்படுத்துவது நற்பண்புகளாகும்.
  - நாம் வாழ்வில் பின்பற்ற வேண்டிய நற்பண்புகள் பல உள்ளன.

    (உ+ம்)

    (1) **பணிவு:**
    - இதனை நாமெல்லோரும் வாழ்வில் கடைப்பிடித்தல் வேண்டும்.
    - ''எல்லார்க்கும் நன்றாம் பணிதல்''
    - நாம் நமது அகங்காரத்தை நீக்கினால் பணிவு தானே வரும்.
    - மனித வாழ்வோடு இணைந்து பணிவும் வளர வேண்டும்.

    (2) **நன்றி மறவாமை:**
    - ''நன்றி மறத்தல் நன்றன்று''
    - ஒருவர் செய்த உதவிக்கு நாம் கட்டாயமாக நன்றி பாராட்டுதல் வேண்டும்.
    - கர்ணன், கும்பகர்ணன் ஆகியோர் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

(3) **நீதி, நேர்மை:**
- மனுநீதிகண்ட சோழன் கதை நீதி, நேர்மையைக் காட்டும்.
- நாமும் நீதி, நேர்மையுடையோராய் வாழ்தல் வேண்டும்.

(4) **பொறுமை:**
- பொறுமை எனும் நற்பண்பு மிக முக்கியமானதாகும்.
- எ+து: தருமன்

(5) **சகோதரத்துவம்:**
- எல்லோரையும் சகோதர உணர்வுடன் போற்றுதல் வேண்டும்.
- இராமர் குகனை தமது சகோதரனாக ஏற்றுக்கொண்டது சகோதரத்துவத்துக்கு மேலான ஒரு எடுத்துக்காட்டாகும்.

(6) **பஞ்சமாபாவங்களைத் தவிர்த்தல்:** (கொலை, களவு, கள் உண்ணல், பொய்,குருநிந்தை)
- இவற்றினை வாழ்வில் தவிர்த்து நன்னிலை பெறவேண்டும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 5:**
- வாழ்வியலில் போற்றப்பட வேண்டிய நற்பண்புகளை அறிவர்
- நற்பண்புடையோராய் வாழ்வர்
- நற்பண்புகளைக் கூறும் கதைகளை தேடி வாசிப்பர்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்
- பின்னிணைப்பு - கதைகள் அடங்கிய கோவை.

**இணைப்பு 1.1:**

**மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

(1) வாழ்வியல் நற்பண்புகளில் உங்களுக்கு வழங்கப்பட்ட தலைப்புப் பற்றிய தகவல் களைத் திரட்டுங்கள்.
(2) அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நாடகப் பிரதி ஒன்றினை ஆக்குங்கள்.
(3) நாடகத்தினை அனைவரின் முன்னிலையிலும் நடித்துக் காட்டுங்கள்.

**குழு- 1:** - பணிவு, நன்றி மறவாமை.
**குழு- 2:** - நீதி, நேர்மை, பொறுமை.
**குழு- 3:** - பஞ்சமா பாவங்களைத் தவிர்த்து நடத்தல்.
**குழு- 4:** - சகோதரத்துவம்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)..........................................................................................................................
(2)..........................................................................................................................
(3)..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

எல்லாச் சந்தர்பப்ங்களிலும் தாங்களும் நற்பண்புடையோராய் வாழ்வதோடு தங்கள் பிள்ளைகளுக்கும் வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 1.0 :** தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறு களைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.4 :** வாழ்வியல் மேம்பாட்டிற்காக சடங்குகளை அறிந்து அவற்றை முறைப்படி கடைப்பிடிக்கும் முறையை இனங்காட்டுவர்.

**செயற்பாடு :** ‘‘புதுமனை புகுதல் பற்றி அறிந்து அதனை வாழ்வில் பயன் படுத்துவோம்.’’

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- புதுமனை புகுதல் பற்றிய சமய நம்பிக்கைகளை அறிந்து போற்றுவர்.
- புதுமனை நிகழ்வு பிரதேச அடிப்படையில் வேறுபடும் என்பதை அறிவர்.
- புதுமனை புகுதலை நம்பிக்கையோடு தம் வாழ்வில் கடைப் பிடிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்கள் தாம் கண்ட புதுமனை புகுதல் தொடர்பான விடயங்களை கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மனித வாழ்க்கையில் இது ஒரு முக்கிய நிகழ்வு என்பதைக் கூறுங்கள்.

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் குழுக்களாக இயங்குவதை மேற்பார்வை செய்யுங்கள்.
- தேவைக்கேற்ப தகுந்த ஆலோசனை வழங்குங்கள்.
- குழுவினரின் அறிக்கையைச் சமர்ப்பிக்க இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்களுக்கும் கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- மாணவர்கள் கூறும் கருத்துக்களையும், பின்வரும் விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.
  - முறைப்படி புதிதாக அமைக்கப்பட்ட வீட்டில் குடிபுகுதல் புதுமனை புகுதல் எனப்படும்.
  - புதுமனை புகுதலோடு தொடர்புடைய பல்வேறு அம்சங்கள் காணப்படு கின்றன.

    **நிலம் தெரிதல்:**
    - வீடு அமைப்பதற்கு பொருத்தமான நிலத்தினை தெரிவு செய்தல் வேண்டும்.
    - மயானத்தை அண்டிய பிரதேசங்களைத் தவிர்ப்பது நல்லது.

**அத்திபாரம் இடுதல்:**
- அத்திபாரம் இடுதல் மிக முக்கிய நிகழ்வாகும்.
- அத்திபாரத்திற்கு அடிக்கல் நாட்டும்போது பின்வரும் பொருட்கள் தேவையாகும்.
  * நவரத்தினம்
  * நவதானியம்
  * நண்டுக்குழி மண்
  * யானைத்தந்த மண்
  * காளைக் கொம்பு மண்
  * ஆற்று மண்
  * எறும்புப் புற்று மண்
  * அட்சரம் எழுதப்பட்ட செப்புத்தகடு
- இதன்போது வாஸ்து புருசரை தொடர்ந்து 45 நாட்கள் வணங்குதல் வேண்டும்.

**நிலை வைத்தல்:**
- புதுமனை புகுதலில் நிலை வைத்தல் மிக முக்கிய நிகழ்வாகும்

**வளை வைத்தல்:**
- வீட்டைச் சுற்றி (வளை) காவல் பண்ணுதல் இடம்பெறும்.
- அட்சரம் எழுதப்பட்ட செப்புத்தகடு, சங்கு, குங்கிலியம், வேம்பு (வேப்ப மரக்கிளையின் சிறுதுண்டு), குளம், கடல், ஆறு, வாய்க்கால் போன்றவற்றின் மண், நீர் என்பவற்றைக் கொண்டு இலக்குமி, விநாயகர் முதலான தெய்வங்களுக்கு கும்பம் வைத்து காவல் பண்ணுதல் இடம் பெறும்.

**மனை புகுதல்:**
- இதன்போது பல்வேறு கிரியைகள் இடம்பெறும்.
  * கும்பம் வைத்தல் (விநாயகர், இலக்குமி)
  * யாகம் செய்தல்
  * வாஸ்து சாந்தி செய்தல்
  * காப்புக்கட்டல்
- நன்நிமித்தத்தின் பொருட்டு முதல் நாளில் வீட்டினுள் வெள்ளை நிறப் பசுவைக் கட்டிவிடல். அடுத்த நாள் அதனை துப்புரவு செய்து கொள்ளல்.
- புதுமனை புகுதலின்போது உப்பு, நெல், சுண்ணாம்பு. கோயிற் பூசையில் வைக்கப்பட்ட சுவாமிப்படங்கள் என்பன கொண்டு வரப்படும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- புதுமனை பற்றி தாம் அறிந்தவற்றைக் கூறுவர்.
- புதுமனை புகுதலோடு தொடர்புடைய சமய நம்பிக்கைகளைக் கூறுவர்
- புதுமனை புகுதல் நிகழ்வானது பிரதேச அடிப்படையில் வேறுபடும் என்பதை அறிவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- புதுமனை புகுதல் தொடர்பான படங்கள்
- டிமை கடதாசி, பேனா
- மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு 1.1:**

## மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

நீங்கள் பிரிக்கும் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரதிகளை வழங்குங்கள்.

**குழு- 1:** - புதுமனை புகுதலோடு தொடர்புடைய படங்களைத் திரட்டுங்கள்.

**குழு- 2:** - புதுமனை புகுதலில் இடம்பெறும் முக்கிய விடயங்களைப் பட்டியல்படுத் துங்கள்.

**குழு- 3:** - புதுமனை புகுதலில் இடம்பெறும் சமய நிகழ்வுகள் யாவை?

**குழு- 4:** - இந்நிகழ்வு பற்றிய மக்களின் எதிர்பார்ப்புகள் யாவை?

### ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)...........................................................................................................................

(2)...........................................................................................................................

(3)...........................................................................................................................

### பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

புதுமனை புகுதல் நிகழ்வில் தங்கள் பிள்ளைகளை ஈடுபடச் செய்து அவர்களின் பங்கு பற்றுதலுக்கு வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 :** தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறு களைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.5 :** வாழ்வின் மேம்பாட்டில் விரதங்கள், பண்டிகைகள் வகிக்கும் முக்கியத்துவத்தை விளங்கி, அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவர்.

**செயற்பாடு :** "விரதங்களை அனுஷ்டிப்போம்."

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**
- நாள், மாத விரதங்களை அறிந்து போற்றுவர்.
- விரதங்களை அனுஷ்டிக்க முன்வருவர்.
- விரத தினத்தன்று தானம் செய்வர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்கள் தாம் அறிந்த விரதங்களைக் கூறுவதற்கு இடமளியுங்கள்.
- கடவுளரையும் அவர்க்குரிய விரதங்களையும் மாணவர்களுக்குக் கூற இடமளியுங்கள்.

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் குழுக்களாக இயங்குவதை மேற்பார்வை செய்யுங்கள்.
- தேவைக்கேற்ப தகுந்த ஆலோசனை வழங்குங்கள்.
- குழுவினரின் அறிக்கையைச் சமர்ப்பிக்க இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்களுக்கும் கருத்துக்களை வழங்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- மாணவர்கள் கூறும் கருத்துக்களையும், பின்வரும் விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.
  - விரதம் எனப்படுவது மனம், பொறி வழிச் செல்லாது நிற்றல்பொருட்டு, உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் இறைவனை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலாகும்.
  - **தைப்பூசம்:**
    * பூசம் என்பது பஞ்சாங்கம் குறிப்பிடும் 27 நட்சந்திரங்களுள் எட்டாவதாகும்.
    * இந்நாள் இந்துக்களின் புனித நாளாகும்.
    * இது பெரும்பாலும் பௌர்ணமியுடன் கூடிய நாளாக இருக்கும்.
    * இத்தினம் சிவசக்தி ஐக்கியத்தைக் காட்டும் நாளாகவும் கொண்டாடப் படுகின்றது.
  - **தைப்பூசத் திருநாள்:**
    * உலகசிருஷ்டியின் ஆரம்ப நாள் எனவும்,
    * பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய இருவரும் காணும்படி நடராஜப் பெருமான் சிவதாண்டவம் ஆடிய நாள் எனவும்,
    * வாயு, வருணர், அக்கினி ஆகிய தேவர்களும் சிவபெருமானின் அதீத சக்தியை உணர்ந்த நாள் எனவும் குறிப்பிடுவர்.

- **இத்தினத்தில் மேற்கொள்ளப்படும் நற்செயல்கள்:**
  * ஏடு தொடக்கல்.
  * புதிதெடுத்தல்.
  * புதிதுண்ணல்.
  * பெண் குழந்தைகளுக்கு காது குத்தல்.
  * மூக்குக் குத்தல்.

- **மாசி மகம்:**
  * மாசி மாதத்தில் வரும் மக நட்சத்திரம் பௌர்ணமியோடு சேர்ந்து வரும் இத்தினம் மிகவும் சிறப்பானது.
  * வருணனைப் பிடித்த தோசம் நீங்கிய நாளாகவும் தக்கன் மகளாக தாட்சாயினி அவதரித்த திருநாளாகவும் இது குறிக்கப்படுகின்றது.
  * வியாழ பகவான் மக நட்சத்திரத்துடன் கூடிய கும்ப ராசிக்குச் செல்லும் புண்ணிய காலம் மகா மகம் எனப்படும்.
  * இது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 5:**
- விரதங்களை அறிந்து போற்றுவர்.
- விரதங்களை அனுட்டிக்க முன்வருவர்.
- கூட்டு மனப்பாங்குடன் இயங்குவர்.
- பிறருக்கு உதவி செய்ய முன்வருவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு 1.1:**

**மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

**குழு- 1, 3:** (1)மாசி மக விரத காலத்தைக் குறிப்பிடவும்.
(2)மாசி மக விரதத்தின் சிறப்புக்களை எழுதுங்கள்.

**குழு- 2, 4:** (1)தைப்பூச விரத காலத்தைக் குறிப்பிடவும்.
(2)தைப்பூச விரதத்தின் சிறப்புக்களை எழுதுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1).................................................................................................................

(2).................................................................................................................

(3).................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

ஒவ்வொரு விரதங்களையும் வீட்டில் தங்கள் பிள்ளைகளுடன் அனுட்டியுங்கள் அவை தொடர்பான விளக்கத்தினை பிள்ளைகளுக்குக் கூறி வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0 :** தமது அன்றாட வாழ்க்கையில் இறைசிந்தனையுடன் சமய ஒழுகலாறு களைக் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 1.5 :** வாழ்வின் மேம்பாட்டில் விரதங்கள், பண்டிகைகள் வகிக்கும் முக்கியத்துவத்தை விளங்கி, அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவர்.

**செயற்பாடு :** ‘‘பண்டிகைகளைக் கொண்டாடுவோம்.’’

**பாடவேளை :** 01

**கற்றற் பேறுகள் :**
- பண்டிகைகளுக்கு மதிப்பளித்து அவற்றைக் கொண்டாட முன்வருவர்.
- பண்டிகை கொண்டாடுவதற்காக ஒழுங்குகளை திறம்படச் செய்வர்.
- கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவர்.
- பண்டிகைகள் ஊடாக உறவுகளை விருத்திச் செய்வர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்கள் தைப்பொங்கல் பற்றி அறிந்த விடயங்களைக் கூற இடமளியுங்கள்.
- பண்டிகைகளுள் அதுவும் ஒன்று என்பதை வலியுறுத்துங்கள்.

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் படிவங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டிற்கான தரஉள்ளீடுகளை உரிய வகையில் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் குழுக்களாக இயங்குவதை மேற்பார்வை செய்யுங்கள்.
- தேவைக்கேற்ப தகுந்த ஆலோசனை வழங்குங்கள்.
- குழுவினரின் அறிக்கையைச் சமர்ப்பிக்க இடமளியுங்கள்.
- ஏனைய குழுக்களுக்கும் கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- மாணவர்கள் கூறும் கருத்துக்களையும், பின்வரும் விடயங்களையும் அடிப்படை யாகக் கொண்டு கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளுங்கள்.
  - **தைப்பொங்கல்:**
    * தைப்பொங்கல் பண்டிகை பல்வேறு பெயர்களினால் அழைக்கப்படும்.
      (உ+ம்) அறுவடைத் திருநாள்
      உழவர் திருநாள்
    * சூரியன் தனு ராசியிலிருந்து மகர ராசிக்குச் செல்லும் தினத்தில் தைப்பொங்கல் கொண்டாடப்படும்.
    * பொங்கல் தினத்திற்கு முதல் நாள் போகிப் பண்டிகையும், பொங்கல் தினத்திற்கு அடுத்து மாட்டுப் பொங்கலும் நடைபெறும்.
    * பொங்கல் தினத்தில் கீழ்வரும் செயல்கள் இடம்பெறும்.
      - சூழல் சுத்தம்
      - கோலம் போடுதல்
      - மாவிலை தோரணம் கட்டுதல்
      - பொங்குதல்
      - கடவுள் வழிபாடு நடத்தல்

- சூரியனுக்குப் படைத்து வழிபடுதல்.
- நன்றி சொல்லுதல்.
- மற்றவர்களுக்கும் கொடுத்து உண்ணுதல்.
- உறவினர்களுடன் கலந்து மகிழுதல்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 5:**
- பண்டிகைகளுக்கு மதிப்பளிப்பர்.
- பண்டிகைகளைக் கொண்டாடுவர்.
- பிற உயிர்களை மதிப்பர்.
- கூட்டு மனப்பாங்குடன் செயற்படுவர்.
- உறவுகளை விருத்தி செய்வர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்
- தைப்பொங்கல் கொண்டாடப்படும் படங்கள்.

**இணைப்பு 1.1:**

**மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

ஒவ்வொரு குழுவுக்கும் பிரதிகளை வழங்குங்கள்.

(1) தைப்பொங்கல் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படும்?
(2) தைப்பொங்கல் எப்போது கொண்டாடப்படும்?
(3) தைப்பொங்கலை ஒட்டி நடைபெறும் பண்டிகைகள் எவை?
(4) தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறும் விடயங்களை அறிக்கையாகத் தயாரியுங்கள்.
(5) மாட்டுப் பொங்கல் தினத்தன்று நடைபெறும் விடயங்களை அறிக்கையாகத் தயாரி யுங்கள்.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)..........................................................................................................................
(2)..........................................................................................................................
(3)..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

தைப்பொங்கல் பண்டிகையின் முக்கிய அம்சங்களை தங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடி பண்டிகை நாட்களின் நடைமுறைகளைக் கலந்துரையாடுங்கள்

**தேர்ச்சி 2.0 :** பக்தி, இறைநம்பிக்கைகளின் சாதனம் என்பதையுணர்ந்து, அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 2.1 :** சமய நூல்களையும் அவற்றின் பக்தி வெளிப்பாடுகளையும் அறிந்து வெளிப்படுத்துவர்.

**செயற்பாடு :** "திருமுறைகளின் வைப்பு முறைகளையும், பொருள் மரபையும் அறிந்து தமது வாழ்வில் பக்தியுடன் பதிகங்களைப் பாடுவோம்."

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**
- திருமுறை என்பதன் பொருள் விளக்கத்தினைக் கூறுவர்.
- திருமுறைகளின் வைப்பு முறையையும் அதன் ஆசிரியர்களையும் அறிந்து அட்டவணைப்படுத்துவர்.
- திருமுறைகள் கூறும் பொருள் மரபின் அறிமுகத்தினைப் பெறுவர்.
- திருமுறைகளைப் பக்தியுடன் ஓதுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்கள் திருமுறை பற்றியறிந்தவற்றைக் கூறும்படி கேட்டுக் கலந்துரையாடலை நடத்துதல்.
- திருமுறைகள் கூறும் விடயங்களை மாணவர்கள் கூறச் சந்தர்ப்பம் வழங்குதல்.

**படி- 2:**
- மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தையும் உரிய தரஉள்ளீட்டுப் பொருள்களையும் பகிர்ந்தளியுங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுவதனை அவதானித்து தேவையானவிடத்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிய விடயங்களை அறிக்கையாக்கி முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் தொகுப்பினை மேற் கொள்ளுங்கள்.
- அதன்போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - திருமுறை என்பது தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை எனப்படும்.
  - இராஜராஜனின் வேண்டுகோளுக்கமைய நம்பியாண்டார் நம்பி திருமுறை களை பதினொன்றாக வகுத்தார்.
  - திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் மரபில் வந்த பெண்ணொருவர் பண் வகுத்தார்.
  - பன்னிரண்டாம் திருமுறையில் சேக்கிழாரின் பெரியபுராணம் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது.

| திருமுறை | நூல் | ஆசிரியர் |
|---|---|---|
| 1ம் திருமுறை<br>2ம் திருமுறை<br>3ம் திருமுறை | தேவாரம் | திருஞானசம்பந்தர் |
| 4ம் திருமுறை<br>5ம் திருமுறை<br>6ம் திருமுறை | தேவாரம் | திருநாவுக்கரசர் |

| | | | |
|---|---|---|---|
| 7ம் திருமுறை | - தேவாரம் | - | சுந்தரமூர்த்தி நாயனார் |
| 8ம் திருமுறை | - திருவாசகம் | | மாணிக்கவாசகர் |
| | - திருக்கோவையார் | | |
| 9ம் திருமுறை | - திருவிசைப்பா | - | திருமாளிகைத்தேவர் |
| | | - | சேந்தனார் |
| | | - | கருவூர்த்தேவர் |
| | | - | பூந்துருத்திகாடநம்பி |
| | | - | கண்டராதித்தர் |
| | | - | வேணாட்டடிகள் |
| | | - | திருவாலியமுதனார் |
| | | - | புருடோத்தமநம்பி |
| | | - | சேதிராயர் |
| | - திருப்பல்லாண்டு | - | சேந்தனார் |
| 10ம் திருமுறை | - திருமந்திரம் | - | திருமூலர் |
| 11ம் திருமுறை | - நாற்பது பிரபந்தம் | - | திருவாலவாயுடையார் |
| | | - | காரைக்காலம்மையார் |
| | | - | ஐயடிகள்காடவர்கோன் |
| | | - | சேரமான் பெருமாள் நாயனார் |
| | | - | நக்கீரதேவ நாயனார் |
| | | - | கல்லாடனார் |
| | | - | கபிலதேவர் |
| | | - | பரணதேவர் |
| | | - | இளம்பெருமானடிகள் |
| | | - | அதிராவடிகள் |
| | | - | பட்டினத்தடிகள் |
| | | - | நம்பியாண்டார்நம்பி |
| 12ம் திருமுறை | - பெரியபுராணம் / திருத்தொண்டர்புராணம் | - | சேக்கிழார் |

- திருமுறைகள் கூறும் பொருள் மரபுகளாக;
  * கடவுள், ஆன்மா, பாசங்களின் இயல்பும் தொடர்பும்
  * சைவநாற்பாதங்கள்

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:**
- திருமுறை என்பதன் பொருள் விளக்கத்தைக் கூறுவர்.
- திருமுறைகளின் வைப்புமுறையையும் ஆசிரியர்களையும் அட்டவணைப் படுத்துவர்.
- திருமுறைகள் கூறும் பொருள் மரபினை விளக்குவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்
- அட்டவணைகள்

## இணைப்பு 2.1:

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

**குழு- 1, 3:** திருமுறைகளின் வைப்புமுறையையும் ஆசிரியர்களையும் அட்டவணைப்படுத்திக் காட்சிப்படுத்துங்கள்.

**குழு- 2, 4:** திருமுறைகள் கூறும் பொருள் மரபினைத் தேடித் தொகுக்க.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(3) ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

திருமுறையின் ஒழுங்குமுறையினை சரியான முறையில் அறிந்து பிள்ளைகளை எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 :** **பக்தி, இறைநம்பிக்கைகளின் சாதனம் என்பதையுணர்ந்து, அதனை தமது வாழ்வில் மேற்கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 :** நாயன்மாரின் வரலாறுகளினூடாக அவர்களது இறைநம்பிக்கையை யும், பக்தி உணர்வையும் அறிந்து அவற்றின் வழி ஒழுகுவர்; பக்தியின் சிறப்பை எடுத்துரைப்பர்.

**செயற்பாடு :** ''சிவனடியார் வழிபாட்டின் சிறப்பினையும் இறைபக்தியினையும் காரைக்கால் அம்மையார் கதை மூலம் அறிந்து இறைவழிபாட்டினை யும் சிவனடியார்களை போற்றும் பண்பினையும் மேற்கொள்வோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- சிவனடியார்களை சிவன் எனப் போற்றி வணங்குவோம்.
- சிவனடியார்களுக்கு மதிப்பளித்து அன்போடு உணவளிப்போம்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- சிவனடியார்களை மதித்து வழிபட்ட நாயன்மார்களின் பெயர்களைக் கேட்டு அறியுங்கள்.
- சிவனடியார் வழிபாட்டின் சிறப்பினைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்கள் தாம் மேற்கொண்ட சிவனடியார் வழிபாட்டினை கேட்டு அறிந்து கலந்துரையாடுங்கள்.
- பெண் அடியார்கள் செய்த சமயப் பணிகள் பற்றி மாணவர்களின் எண்ணக் கருக்களை அறியுங்கள்.

**படி- 2:**
- மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள். காரைக்கால் அம்மையார் வரலாறு, அடியார் வழிபாடு, விருந்தோம்பும் பண்பு, சிவன் அருள் பெறல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டு பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் தரஉள்ளீட்டுப் பொருள்களை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுவதனை அவதானித்து தேவையானவிடத்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிய விடயங்களை அறிக்கையாக்கி முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்தை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- மேலதிக கருத்துக்கள் தேவைப்படின் விளக்கம் அளித்து, மாணவர்களை நெறிப்படுத்துங்கள். அதன்போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - புனிதவதியார் என்ற இயற்பெயர் கொண்ட அம்மையார் காரைக்காலில் பிறந்தமையினால் காரைக்கால் அம்மையார் என்று அழைக்கப்பட்டார்.
  - இவரின் தந்தை பெயர் தனதத்தன். கணவன் பெயர் பரமதத்தன் ஆவார்கள்.
  - கருவிலே திருவுடைய புனிதவதியார் இளமையிலேயே இறைபக்தியும் சிவனடியார் வழிபாடும் கொண்டவர்.

- திருமணம் முடித்த பின்னரும் சிவனடியார்களுக்கு அமுது செய்தலை தனது திருத்தொண்டாகக் கொண்டார்.
- இவரது இறைபக்தியையும் சிவனடியாருக்கு அமுது அளிக்கும் திறனையும் உலகறியச் செய்ய இறைவன் திருவுளம் கொண்டார்.
- இறைவன் சிவனடியார் வடிவம் தாங்கி காரைக்கால் அம்மையார் மனை வந்தபோது உணவளித்து, கணவரால் அனுப்பப்பட்ட மாங்கனி ஒன்றினையும் வழங்கினார்.
- வீடு திரும்பிய கணவனுக்கு உணவு அளித்தபோது அவன் மாங்கனியைக் கொண்டு வருமாறு கூறினான். அதன் சுவையறிந்த கணவன் மற்றைய கனியையும் கொண்டு வருமாறு கேட்டபோது,செய்வதறியாது திகைத்த அம்மையார் இறைவனிடம் வேண்டி மாங்கனியைப் பெற்று கணவனுக்கு கொடுத்தார்.
- சுவை வேறுபாடு அறிந்த கணவன் காரணம் கேட்டு அறிந்து இறைவன் செயல் எனக் கண்டு காரைக்கால் அம்மையார் தெய்வப் பெண் எனக் கருதி அவரை விட்டு நீங்கினான்.
- மறுமணம் புரிந்த பரமதத்தன் தனது பிள்ளைக்கு புனிதவதியார் எனப் பெயரிட்டு வாழ்ந்தார்.
- கணவனின் இச்செயலால் மனமுடைந்த அம்மையார் இறைவனிடம் பேய் வடிவம் வேண்டி, கையிலையை நோக்கி தலையாலே நடந்து சென்றார். இவரது செயலைக் கண்டு இறைவன் அம்மையே என்று அழைத்த சிறப்பும் இவருக்கு உண்டு.
- இவர் மூத்ததிருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, திருவலங்காட்டு மூத்த திருப்பதிகம் போன்ற பதிகம் பாடி பக்தி நெறி வளர்ச்சிக்கு வித்திட்ட பெண் அடியார்களில் ஒருவர்.
- அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக பெரிய புராணம் குறிப்பிடு கின்றது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- இறையருள் பெறுவதற்கு இறைநம்பிக்கையும் இறைவழிபாடும் முக்கியம் என்பதனைக் கூறுவர்.
- சிவனடியார்களைப் போற்றி விருந்தோம்பல் செய்வது நற்பண்பாகும்.
- சிவ வழிபாடு, சிவனடியார்க்கு அமுதளித்தல் ஆகிய பண்புகளில் சிறந்து விளங்கியவர் காரைக்கால் அம்மையார் ஆவர்.
- இறைவனால் அம்மையே என அழைக்கப்பட்டவர்.
- இவர் இறைவன் மீது பாசுரங்கள் பாடி பக்திநெறியை வளர்த்தார்.
- செயற்கரிய செயல்கள் செய்ததன் மூலம் பெரிய புராணம் கூறும் அறுபத்து மூன்று அடியார்களில் இவரும் ஒருவராக சிறப்புப் பெற்றவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- டிமை கடதாசி, பேனா
- இணைப்பு 2.2 இலுள்ள மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

- பாடநூல்

## இணைப்பு 2.2:

## மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

**குழு- 1:** காரைக்கால் அம்மையார் வரலாற்றினை நாடகமாக பிரதியாக்கம் செய்க.

**குழு- 2:** பிரதியாக்கம் செய்யப்பட்ட நாடகத்தினை நடித்துக் காட்டுக.

### ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..............................................................................................................................

(2) ..............................................................................................................................

(3) ..............................................................................................................................

### பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

வீட்டிற்கு வரும் சிவனடியார்களுக்கு அன்போடு உணவளிக்க பிள்ளைகளுக்கு உதவுங்கள். வீட்டில் மகேஸ்வர பூசை செய்வதற்கு பிள்ளைகளை வழிப்படுத்துங்கள்

**தேர்ச்சி 3.0 :** திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்சபுராணத்தையும் தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**செயற்பாடு :** "திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரத்தினைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக பதிகத்தினை எழுதுவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- திருஞான சம்பந்த சுவாமிகளின் தேவாரத்தினைப் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- எழுத்துப் பிழையின்றி பதிகத்தினை எழுதுவர்.
- தனது நாளாந்த வழிபாட்டில் பதிகத்தினை ஓதுவர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**
- மாணவர்களிடம் திருஞானசம்பந்த சுவாமிகள் பாடிய பதிகத்தினைக் கேட்டு அறியுங்கள்.
- அப்பதிகத்தினைப் பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- பதிகங்களைப் பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடும்படி கூறுங்கள். (தேவையேற்படின் சங்கீத ஆசிரியரை அல்லது இறுவட்டினைப் பயன்படுத்தவும்.)

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர் ஒவ்வொருவரும் தனித்தனியே இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
- பதிகத்தினை பண்ணோடு பாடுவதற்கு முன்னாயத்தம் செய்ய நெறிப்படுத்துங்கள்.
- பதிகத்தினைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே தேவாரத்தினை மனனம் செய்து பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயம் தொடர்பாக கவனம் செலுத்துங்கள்.
  - "நிரை கழலரவம்......", "விருது குன்றமா......" ஆகிய பதிகங்கள் திருஞான சம்பந்த சுவாமிகளினால் இராமேஸ்வரத்தில் இருந்து திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம் ஆகிய தலங்கள் மீது பாடப்பட்டன.
  - இவ்விரண்டு தலங்களும் பாடல் பெற்ற தலங்கள் என்ற பெருமைக்குரியவை.
  - "நிரை கழலரவம்......" என்ற பதிகம் திருக்கோணேஸ்வர ஆலயச் சூழலின் இயற்கை அழகைக் கூறி இறைவன் பெருமையை விளக்குகின்றது.
  - "விருது குன்றமா......" என்ற பதிகம் இறைவன் முப்புரம் எரித்த புராணக் கதையை விளக்கி திருக்கேதீஸ்வரப் பெருமானை வழிபட்டால் கடுவினை அடையா எனக் கூறப்படுகின்றது.
  - தேவாரம் பாட முன்பும், பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் கூறப்பட வேண்டும்.
  - தேவாரத்தினை எழுத்துப் பிழையின்றி உச்சரித்துப் பண்ணோடு பாடப்பட வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- "நிரை கழலரவம்......", "விருது குன்றமா......" என்ற பதிகங்கள் திருஞானசம்பந்தரால் முறையே கோணோஸ்வரம், கேதீஸ்வரம் ஆகிய தலங்கள் மீது பாடப்பட்டன என்பதனைக் கூறுவர்.
- திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆகிய தலங்கள் பாடல் பெற்ற தலங்கள் என்பதனை அறிவர்.
- இறைவன் முப்புரம் எரித்த புராணக் கதையை விளக்குவர்.
- திருக்கோணேச்சர ஆலய இயற்கைச் சூழலை கூறுவர்.
- தேவாரத்தினைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்

## இணைப்பு 3.1.1:

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

**குழு- 1:**
(1) "நிரை கழலரவம்......" என்ற பதிகம் யாரால் எத்தலத்தின் மீது பாடப்பட்டது?
(2) பதிகத்தினை அடிப்படையாகக் கொண்டு திருக்கோணேச்சர ஆலய சூழலை எழுதுக.
(3) வரை கெழு மகளரோர் பாகமாய் புணர்ந்த இறைவனின் வடிவம் யாது?
(4) "நிரை கழலரவம்......" என்ற பதிகத்தினை வரிக்கிரமமாக எழுதுக.

**குழு- 2:**
(1) "விருது குன்றமா......" என்ற பதிகம் யாரால் எத்தலத்தின் மீது பாடப்பட்டது?
(2) இப்பதிகம் விளக்கும் புராணக்கதையை எழுதுக.
(3) இலங்கையில் தேவாரம் பாடப்பெற்ற இரு சிவத் தலங்கள் எவை?
(4) "விருது குன்றமா......" என்ற பதிகத்தினை வரிக்கிரமமாக எழுதுக.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..................................................................................................................
(2) ..................................................................................................................
(3) ..................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

வீடு, கோயில், பாடசாலை ஆகிய இடங்களிலும், சமய விழாக்களிலும் பண்ணோடும் பக்தி யோடும் பதிகங்களைப் பாட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 :** திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்சபுராணத்தையும் தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**செயற்பாடு :** ''திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரத்தினைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக பதிகத்தினை எழுதுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரத்தினைப் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக பதிகத்தினை எழுதுவர்.
- தனது நாளாந்த வாழ்வில் பண்ணோடும் பக்தியோடும் பதிகங் களைப் பாடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய பதிகத்தினைக் கேட்டு அறியுங்கள்.
- அப்பதிகத்தினை பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- பதிகங்களை பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களை பாடும்படி கூறுங்கள். (தேவையேற்படின் சங்கீத ஆசிரியரை அல்லது இறுவட்டினைப் பயன்படுத்தவும்.)

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர் ஒவ்வொருவரும் தனித்தனியே இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
- பதிகத்தினைப் பண்ணோடு பாடுவதற்கு முன்னாயத்தம் செய்ய நெறிப்படுத் துங்கள்.
- பதிகத்தினைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே தேவாரத்தினை மனனம் செய்து பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயம் தொடர்பாக கவனம் செலுத்துங்கள்.
  - ''மாதர் பிறைக் கண்ணி...'', ''நங்கடம்பனை...'' ஆகிய பதிகங்கள் திருநாவுக்கரசு சுவாமிகளினால் முறையே திருவையாற்றுத் திருத்தலத்தின் மீதும், மேலைக் கடம்பூர் திருச்சரக் கோயில் மீதும் பாடப்பட்டது.
  - திருவையாற்றில் இறைவனின் திருகைலாயக் காட்சியினை கண்டபோது நாவுக்கரசரால் பாடப்பட்டது.
  - என் கடன் பணி செய்து கிடப்பதே..... என்ற வரிகள் மூலம் சரியைத் தொண்டின் சிறப்பினை விளக்கியுள்ளார்.
  - தேவாரம் பாட முன்பும், பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் கூறப்பட வேண்டும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- மாதர்பிறை கன்னி யானை..., நங்கடம்பனை... ஆகிய பதிகங்கள் திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பட்டன என்பதனை அறிவர்.
- நாவுக்கரசர் திருக்கைலாய காட்சியை கண்ட வரலாற்றினைக் கூறுவர்.
- சரியைத் தொண்டுகளை எடுத்துக் கூறுவர்.
- பதிகங்களை பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்

## இணைப்பு 3.1.2:

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

**குழு- 1:**
(1) "மாதர் பிறைக் கண்ணி..." என்ற பதிகம் யாரால் எத்தலத்தின் மீது பாடப்பட்டது?
(2) திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்கைலாயக் காட்சியினை கண்ட வரலாற்றினை சுருக்கமாக எழுதுக.
(3) "மாதர் பிறைக் கண்ணி..." என்ற பதிகத்தினை வரிக்கிரமமாக எழுதுக.

**குழு- 2:**
(1) "நங்கடம்பனை..."என்ற பதிகம் யாரால் எத்தலத்தின் மீது பாடப்பட்டது?
(2) சரியைத் தொண்டுகள் பற்றி எழுதுக.
(3) "நங்கடம்பனை..." என்ற பதிகத்தினை வரிக்கிரமமாக எழுதுக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................
(2) ..........................................................................................................................
(3) ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1) பதிகங்களைப் பண்ணோடு பாட வழிப்படுத்துங்கள்.
(2) பிள்ளைகளுடன் நீங்களும் இணைந்து பாடுங்கள்.

**தேர்ச்சி 3.0 :** திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்சபுராணத்தையும் தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**செயற்பாடு :** ''சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தினைப் பண்ணோடும் பக்தி யோடும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக பதிகத்தினை எழுதுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தினைப் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- எழுத்துப் பிழையின்றி வரிக்கிரகமாக பதிகத்தினை எழுதுவர்.
- தனது நாளாந்த வாழ்வில் பண்ணோடும் பக்தியோடும் பதிகங் களைப் பாடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய பதிகத்தினைக் கேட்டு அறியுங்கள்.
- அப்பதிகத்தினைப் பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- பதிகங்களைப் பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களை பாடும்படி கூறுங்கள். (தேவையேற்படின் சங்கீத ஆசிரியரை அல்லது இறுவட்டினை பயன்படுத்தவும்.)

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர் ஒவ்வொருவரும் தனித்தனியே இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
- பதிகத்தினை பண்ணோடு பாடுவதற்கு முன்னாயத்தம் செய்ய நெறிப்படுத் துங்கள்.
- பதிகத்தினைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே தேவாரத்தினை மனனம் செய்து பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
  - ''நத்தார்படை...'' என்னும் பதிகம் சுந்தரமூர்த்தி நாயனாரால் இராமேஸ்வரத்தில் உள்ள சேதுக்கரையில் இருந்து திருக்கேதீஸ்வரப் பெருமானை நோக்கிப் பாடப்பட்டது.
  - திருக்கேதீச்சர சூழலையும் பாலாவித் தீர்த்தத்தின் மகிமையையும் பாடி யுள்ளார்.
  - ''பொன்னார் மேனியனே...'' என்ற பதிகம் சுந்தரமூர்த்தி நாயனாரால் திருமழ பாடித் தலத்தில் உள்ள இறைவனைப் போற்றிப் பாடப்பட்டுள்ளது.
  - இறைவனின் தோற்றப்பொலிவினையும் கருணைத் திறத்தினையும் விளங்கு கின்றார்.
  - தேவாரம் பாட முன்பும், பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் எனக் கூற வேண்டும்.
  - பதிகங்களை பண்ணோடும் பக்தியோடும் பாட வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- “நத்தார்படை...” பொன்னார் மேனியனே... ஆகிய பதிகங்கள் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பட்டது என்பதனை அறிவர்.
- “நத்தார்படை...” என்னும் பதிகம் ஊடாக திருக்கேதீச்சர இறைவன், திருக்கேதீச்சர நாதர், கௌரியம்பாளையும், பாலாவித் தீரத்த மகிமையையும் பற்றி எடுத்துக் கூறுவர்.
- “பொன்னார் மேனியனே...” என்னும் பதிகம் இறைவனின் தோற்றப் பொலிவினை விளக்கும் வகையினைக் கூறுவர்.
- பதிகங்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- தேவாரம் பாட முன்பும், பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் எனக் கூறுவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்

### இணைப்பு 3.1.3:

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

**குழு- 1:**
(1) “நத்தார்படை...” என்ற பதிகம் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
(2) திருக்கேதீச்சர இறைவன், அம்பாள், திருநாமங்களைத் தருக.
(3) திருக்கேதீஸ்வர ஆலய தீர்த்தம் யாது?
(4) “நத்தார்படை...” என்ற பதிகத்தினைப் பண்ணோடு பாடுக.

**குழு- 2:**
(1) “பொன்னார் மேனியனே...”என்ற பதிகம் யாரால், எத்தலத்தின் மீது பாடப்பட்டது?
(2) “பொன்னார் மேனியனே...”என்ற பதிகத்தினை வரிக்கிரமமாக எழுதுக.
(3) பதிகத்தினைப் பண்ணோடு பாடுக.

### ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..................................................................................................................
(2) ..................................................................................................................
(3) ..................................................................................................................

### பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1) வீடு, கோயில், பாடசாலை, சமய விழாக்களின்போது பதிகங்களைப் பண்ணோடு பாட பிள்ளைகளை வழிப்படுத்துங்கள்.
(2) பிள்ளைகளுடன் நீங்களும் இணைந்து பாடுங்கள்.

**தேர்ச்சி 3.0 :** திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்சபுராணத்தையும் தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**செயற்பாடு :** ''மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகப் பாடல்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக திருவாசகத்தினை எழுதுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்தினைப் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- எழுத்துப் பிழையின்றி வரிக்கிரகமாகப் பதிகத்தினை எழுதுவர்.
- தனது நாளாந்த வாழ்வில் பண்ணோடும் பக்தியோடும் திருவாச கத்தினை ஓதுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவாசகத்தினைக் கேட்டு அறியுங்கள்.
- திருவாசகத்தினைப் பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- திருவாசகத்தினைப் பண்ணோடு பாடக்கூடிய மாணவர்களைப் பாடும்படி கூறுங்கள். (தேவையேற்படின் சங்கீத ஆசிரியரை அல்லது இறுவட்டினைப் பயன்படுத்தவும்.)

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர் ஒவ்வொருவரும் தனித்தனியே இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
- திருவாசகத்தினை பண்ணோடு பாடுவதற்கு முன்னாயத்தம் செய்ய நெறிப் படுத்துங்கள்.
- திருவாசகத்தினைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே திருவாசகத்தினை மனனம் செய்து பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
  - திருவாசகம் மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பட்டது.
  - திருவாசகத்தில் திருச்சதகம், திருச்சாழல், அச்சோபதிகம், திருவம்மானை, திருவெம்பாவை, பிடித்த பத்து, குழைத்த பத்து என பல வகைப் பாடல்கள் உண்டு.
  - ''அம்மையே அப்பா...'' என்ற பதிகம் பிடித்த பத்து தொகுதியில் அமைந்த பாடலாகும்.
  - ''முத்தி நெறி அறியாத...'' எனும் பதிகம் அச்சோபதிக வகையைச் சார்ந்ததாகும்
  - இறைவன் தன்னை ஆட்கொண்ட சிறப்பினை 'சித்தமலம் அறிவித்து சிவமாக்கி எனை ஆண்ட' என்ற அடிகள் மூலம் விளக்குகின்றார்.

- திருவாசகத்தினைப் பாட முன்பும், பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் எனக் கூற வேண்டும்.
- திருவாசகத்தினைப் பண்ணோடும் பக்தியோடும் பாட வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- திருவாசகம் மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பட்டது என்பதனை அறிவர்.
- திருவாசகத்தில் பல வகைப் பாடல் தொகுதிகள் உண்டு என்பதனைக் கூறுவர்.
- இறைவன் அடியவர்களை ஆட்கொள்வார் என்பதனை திருவாசகப் பாடல் மூலம் விளக்குவர்.
- திருவாசகப் பாடலைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- திருவாசகம் பாட முன்பும், பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் கூறுவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்

## இணைப்பு 3.1.4:

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

(1) திருவாசகம் யாரால் பாடப்பட்டது?
(2) திருவாசகத்தில் அடக்கும் பாடல் வகைகள் நான்கு தருக.
(3) "அம்மையே அப்பா..."என்ற திருவாசகப் பாடலில் மாணிக்கவாசகர் இறைவனை எவ்வாறெல்லாம் அழைக்கின்றார்?
(4) "முத்தி நெறி அறியாத..." என்ற திருவாசகத்தில் இறைவன் தன்னை எவ்வாறு ஆட்கொண்டார் எனக் கூறுகின்றார்?
(5) "அம்மையே அப்பா...", "முத்தி நெறி அறியாத..." என்ற திருவாசகப் பாடல்களை பண்ணோடு பாடுக.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................
(2) ..........................................................................................................
(3) ..........................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1) வீடு, கோயில், பாடசாலை, சமய விழாக்களின்போது பதிகங்களைப் பண்ணோடு பாட பிள்ளைகளை வழிப்படுத்துங்கள்.
(2) பிள்ளைகளுடன் நீங்களும் இணைந்து பாடுங்கள்.

**தேர்ச்சி 3.0 :** **திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்சபுராணத்தையும் தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**செயற்பாடு :** ''திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக பாடல்களை எழுதுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களைப் பாடியோர் பெயர்களை அறிவர்.
- பாடல்களைப் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- எழுத்துப் பிழையின்றி வரிக்கிரகமாகப் பாடல்களை எழுதுவர்.
- தனது நாளாந்த வாழ்வில் பண்ணோடும் பக்தியோடும் பாடல் களை ஓதுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களைக் கேட்டு அறியுங்கள்.
- திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களைப் பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களைப் பாடக்கூடிய மாணவர்களைப் பாடும்படி கூறுங்கள்.
  (தேவையேற்படின் சங்கீத ஆசிரியரை அல்லது இறுவட்டினைப் பயன்படுத்தவும்.)

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர் ஒவ்வொருவரும் தனித்தனியே இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
- திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களைப் பண்ணோடு பாடுவதற்கு முன்னாயத்தம் செய்ய நெறிப்படுத்துங்கள்.
- திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களை மனனம் செய்து பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
  - திருவிசைப்பா சேந்தனார், திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி, கடாநம்பி, திருவாலிபமுதனார் முதலான ஒன்பது பேர்களால் பாடப்பட்டது.
  - ''அன்ன நடையார்...'' என்ற திருவிசைப்பா பாடல் திருவாலிபமுதனாரால் தில்லையில் உள்ள இறைவனைப் போற்றிப் பாடப்பட்டது.
  - இறைவன், இறைவியின் அழகுக்கோலம் கூறப்பட்டுள்ளது.

- தில்லை நடராஜப் பெருமானின் மார்கழித் திருவாதிரை திருநாளில் திருத் தேர்ச் சில்லுகள் சேற்றில் அழுந்தியமையாலே தேர் ஓடாது தடைப்பட் டிருந்தது. அப்பொழுது சேந்தனார் இறைவனைப் பல்லாண்டு வாழ்க என்று பாடினார். தேர் ஓடியது.
- இறைவனைப் பல்வகைக் கலைகளால் ஏற்றி வழிபடும் சிறப்புக் கூறப்பட் டுள்ளது.
- திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களைப் பாட முன்பும், பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் எனக் கூற வேண்டும்.
- திருப்பாடல்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாட வேண்டும்.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- திருவிசைப்பா ஒன்பது பேரால் பாடப்பட்டது என்பதை அறிவர்.
- திருப்பல்லாண்டு சேந்தனாரால் பாடப்பட்டது என்பதைக் கூறுவர்.
- திருப்பல்லாண்டு பாடப்பட்ட சந்தர்ப்பத்தினைக் கூறுவர்.
- திருப்பாடலைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- திருப்பாடலை எழுத்துப் பிழையின்றி எழுதுவர்.
- திருப்பாடலை பாட முன்பும், பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் எனக் கூறுவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்

## இணைப்பு 3.1.5:

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

**குழு- 1:** ‘‘அன்னநடையார்...’’, ‘‘குழலொலி...’’ என்ற திருப்பாடல்களை வரிக்கிரமமாக எழுதுக.

**குழு- 2:** ‘‘அன்னநடையார்...’’, ‘‘குழலொலி...’’ என்ற திருப்பாடல்களை பண்ணோடு பாடுவர்.

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1) வீடு, கோயில், பாடசாலை, சமய விழாக்களின்போது பாடல்களைப் பண்ணோடு பாடப் பிள்ளைகளை வழிப்படுத்துங்கள்.

(2) பிள்ளைகளுடன் நீங்களும் இணைந்து பாடுங்கள்.

**தேர்ச்சி 3.0 :** திருமுறைப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பஞ்சபுராணத்தையும் தோத்திரப் பாடல்களையும் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**செயற்பாடு :** "பெரியபுராணம், திருப்புகழ் ஆகிய பாடல்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாடுவோம். எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாக பாடல்களை எழுதுவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- பெரியபுராணம், திருப்புகழ் பாடல்களைப் பாடியோர் பெயர்களை அறிவர்.
- பாடல்களைப் பொருள் உணர்ந்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.
- எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாகப் பாடல்களை எழுதுவர்.
- தனது நாளாந்த வாழ்வில் பண்ணோடும் பக்தியோடும் பாடல் களை ஓதுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- மாணவர்களிடம் பெரியபுராணம், திருப்புகழ் பாடல்களைக் கேட்டு அறியுங்கள்.
- பெரியபுராணம், திருப்புகழ் பாடல்களைப் பண்ணோடு பாடும்படி கேளுங்கள்.
- பெரியபுராணம், திருப்புகழ் பாடல்களைப் பாடக்கூடிய மாணவர்களைப் பாடும்படி கூறுங்கள்.
  (தேவையேற்படின் சங்கீத ஆசிரியரை அல்லது இறுவட்டினைப் பயன்படுத்தவும்.)

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர் ஒவ்வொருவரும் தனித்தனியே இயங்கிச் செயற்படுவதனை அவதானியுங்கள்.
- பெரியபுராணம், திருப்புகழ் பாடல்களைப் பண்ணோடு பாடுவதற்கு முன்னா யத்தம் செய்ய நெறிப்படுத்துங்கள்.
- பெரியபுராணம், திருப்புகழ் பாடல்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்களைக் கருத்துரை வழங்க இடமளியுங்கள்.
- மாணவர்கள் தனித்தனியே பெரியபுராணம், திருப்புகழ்ப் பாடல்களை மனனம் செய்து பாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
  - தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்ற பஞ்சதோத்திர வரிசையில் இறுதியாகப் பாடப்படுவது பெரியபுராண மாகும்.
  - பெரியபுராணம் திருத்தொண்டர் புராணம் என்றும் அழைக்கப்படுகின்றது.
  - பெரியபுராணம் இறைவனால் 'உலகெலாம்.....' என்று அடி எடுத்துக் கொடுக்க சேக்கிழாரால் பாடப்பட்டது.
  - செயற்கரிய செயல்கள் செய்த அறுபத்துமூன்று மெய்யடியார்கள் பற்றி பாடல் பாடப்படுவதாகும்.

- பஞ்சதோத்திரம் பாடிய பின் திருப்புகழ் பாடப்படும்.
- ‘இறவாமல் பிறவாமல்’ என்ற திருப்புகழ் அருணகிரிநாதரால் இலங்கையில் உள்ள கதிர்காம முருகன் மீது பாடப்பட்டது.
- பெரியபுராணம் பாட முன்பும், பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் எனக் கூற வேண்டும்.
- பாடல்களைப் பண்ணோடும் பக்தியோடும் பாட வேண்டும்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- பெரியபுராணம் சேக்கிழாரால் பாடப்பட்டது என்பதனை அறிவர்.
- பஞ்சதோத்திர வரிசையில் பெரியபுராணம் இறுதியில் பாடப்படுவது என்பதனைக் கூறுவர்.
- பஞ்சதோத்திரங்கள் பாடிய பின் திருப்புகழ் பாட வேண்டும் என்பதனைக் கூறுவர்.
- திருப்புகழ் அருணகிரிநாதரால் கதிர்காம முருகன் மீது பாடப்பட்டது என்பதனை அறிவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்

**இணைப்பு 3.1.6:**

**மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

**குழு- 1:**
(1) பெரியபுராணம் பாடியவர் யார்?
(2) பஞ்சதோத்திரங்கள் எவை?
(3) வேதநெறி தழைத்தோங்க என்ற பெரியபுராண பாடலை பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**குழு- 2:**
(1) திருப்புகழைப் பாடியவர் யார்?
(2) இறவாமல் பிறவாமல் என்ற திருப்புகழை பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

**குழு- 3:** வகுப்பறையில் கூட்டுப் பிரார்த்தனை ஒன்றினை நடத்துக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ......................................................................................................................
(2) ......................................................................................................................
(3) ......................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1) வீடு, கோயில், பாடசாலை, சமய விழாக்களின்போது பாடல்களைப் பண்ணோடு பாட பிள்ளைகளை வழிப்படுத்துங்கள்.
(2) பிள்ளைகளுடன் நீங்களும் இணைந்து பாடுங்கள்.

**தேர்ச்சி 4.0 : சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவர்.**

**தேர்ச்சி மட்டம் 4.1 :** ஆலய வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் பேணும் முறையை எடுத்துரைப்பர்.

**செயற்பாடு :** **ஆலய வழிபாட்டு முறைகளை அறிந்து வழிபாட்டினை மேற்கொள்வோம்.**

**நேரம் :** 02 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள் :**

- 1. ஆலயம் என்பதன் பொருளைக் கூறுவர்.
  2. வழிபாட்டு முறைகளை முறைப்படி தமது வாழ்வில் மேற்கொள்வர்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**
- ஆலயம் தொடர்பான விடயங்களைக் கூற இடமளியுங்கள்
- பின்வரும் விடயங்களின் அடிப்படையில் கலந்துரையாடுங்கள்.
- ஆலயம் என்பதன் பொருள் ஆன்மா லயப்படும் இடமாகும்.
- ஆலயத்திற்குச் செல்லும் போது வெறுங்கையுடன் செல்லாது பழம், பாக்கு, வெற்றிலை போன்ற பூசைபொருட்களை அரைக்கு மேல் தாங்கிச் செல்லல் வேண்டும்.

**படி 2**
- மாணவர்களின் தொகைக்கு ஏற்ப குழுக்களாக்குங்கள்
- ஒவ்வொரு குழுக்களுக்குமுரிய செயற்பாட்டுப் படிவம்,தரஉள்ளீட்டுப் பொருட்களைப் பகிர்ந்தளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டிற்கும் உதவுங்கள்.

**படி 3**
- குழுக்கள் அறிக்கைகளை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதே குழுவினர் கருத்துக்களைக் கூற இடம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.

**படி 4**
- பின்வரும் கருத்துக்களை மையமாகக் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து இறை சிந்தனையுடன் ஆலயத்திற்குச் செல்லல் வேண்டும்.
- ஆலயத்திற்குச் சென்றதும் கோபுரத்தினை வணங்கிப் பின் துவார பாலகரது அனுமதியினைப் பெற்று உள்ளே சென்று முதலில் பிள்ளையாரை மும்முறை குட்டி தோப்புக்கரணம் போட்டு வழிபடல் வேண்டும். பின் மூலமூர்த்தியையும் பரிவாரத் தெய்வங்களையும் வணங்குதல் வேண்டும்.
- இறுதியில் சண்டேஸ்வரரை மூன்றுமுறை கை தட்டி வணங்குதல் வேண்டும்.
- ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்கரமும் இருபாலரும் திரியங்க நமஸ்காரமும் செய்தல் அவசியமாகும்.
- ஆலய வழிபாட்டினை முறைப்படி பேணி வருதல் இந்துக்களின் முக்கிய கடமையாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- செயற்பாட்டுப் படிவம். (ஆகமம் சார்ந்த வழிபாடு)
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்,
- திருக் கோயில் படங்கள்
- வழிபடும் முறை பற்றிய படங்கள்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- ஆலயம் என்பதன் பொருளை எழுதுவர்.
- ஆலய வழிபாட்டின் போது கொண்டு செல்லும் பொருட்கள் ஐந்தினை எழுதுவர்.
- அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்களை வகுப்பறையில் செய்து காட்டுவர்.

**செயற்பாட்டுப் பத்திரம்**

குழு 01
- ஆலயம் என்பதன் பொருளை எழுதுங்கள்.
- ஆலயத்திற்குச் செல்லும் முறையை ஒழுங்குபடுத்தி எழுதுங்கள்.

குழு 02
- ஆலய வழிபாட்டின் போது நீங்கள் கொண்டு சென்ற பூசைப் பொருட்கள் ஐந்தினை எழுதுங்கள்.
- ஆலயத்தில் மேற்கொள்ளும் நமஸ்காரங்களை எழுதுங்கள்.

குழு 03
- ஆலயங்களில் ஆண்கள் மேற்கொள்ளும் நமஸ்காரம் எது?
- பெண்கள் மேற்கொள்ளும் நமஸ்காரம் எது?

குழு 04
- அட்டாங்க நமஸ்காரம் என்றால் என்ன?
- பஞ்சாங்க நமஸ்காரம் என்றால் என்ன?
- இருபாலாரும் செய்யக் கூடிய நமஸ்காரம் யாது?

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

   1.…………………………………………………………………………………………

   2.…………………………………………………………………………………………

   3.…………………………………………………………………………………………

   4.…………………………………………………………………………………………

   5.…………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) ஆலயத்திற்குச் செல்லும் முறையைப் பிள்ளைகளுக்கு பழக்கப்படுத்துங்கள், ஆலய வழிபாட்டிற்கு கொண்டு செல்லும் பூசைப் பொருட்களைத் தயார்படுத்தும் முறைகள், ஆலயத்தில் மேற்கொள்ளும் நமஸ்காரங்களை உரிய முறையில் செய்து காட்டி அவற்றைப் பின்பற்ற வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 :** சைவசமயக் குரவர்கள், சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவோம்.

**தேர்ச்சி மட்டம் 5.1 :** சமய குரவர் வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு ஒழுகும் முறையை அறிந்து கூறுவர்.

**செயற்பாடு :** நாயன்மார்களின் வரலாற்றினையும் அவர் தம் பணியினையும் அறிந்து போற்றுவோம்.

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள் :**

- சமய குரவர்கள் நால்வரும் இறைவன் அருள் பெற்றவர்கள் என்பதை அறிந்து கொள்வர்.
- சமய குரவர்கள் நால்வரும் இறையருளுடன் அற்புதங்களைச் செய்து, மக்களின் துன்பத்தை நீக்கி இறைபக்தியை வளர்த்தனர் என்பதைக்கதைகளுடாக விவரிப்பர்.
- சமய குரவர்களின் குரு பூசைத்தினங்களைக் கொண்டாடி அவர்களின் பணிகளுக்கு மதிப்பளிப்பர்.
- சமய குரவர்கள் பாடிய தேவாரப் பதிகங்களை மனனம் செய்து பாடுவர்.
- சமய குரவர்களின் பணிகளை தாம் வாழும் சூழலில் முன்னெடுத்து பணிகளில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- நாயன்மார்களின் படங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்
- அதனை அடிப்படையாகக் கொண்டு உரையாடல் ஒன்றினை நிகழ்த்துங்கள்

**படி- 2:**
- மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தையும் உரிய தரஉள்ளீட்டுப் பொருட்களையும் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் குழுக்களாக இயங்குவதை மேற்பார்வை செய்யுங்கள்
- தேவைக்கேற்பத் தகுந்த ஆலோசனை வழங்குங்கள்
- நாடகம், வில்லுப்பாட்டு தொடர்பான சிறப்புத் தேர்ச்சி உடைய ஆசிரியர்களின் உதவியினையும் நாட முடியும்
- குழுவினரின் நாடகம், வில்லுப்பாட்டினை சமர்ப்பிக்க இடமளியுங்கள்
- ஏனைய குழுக்களும் கருத்துக்களை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பொன்றினை வழங்குங்கள்
- அதன்போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்
  திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்
    - பெற்றோர் - சிவபாதவிருதையர், பகவதி
    - நாடு – சோழ நாடு
    - பிறந்த இடம் - சீர்காழி
    - இளமைப்பெயர் - சம்பந்தர்
    - முதலில் பாடியது – தோடுடைய செவியன்
    - வேறு பெயர்கள் - ஆளுடைய பிள்ளை, ஞான சம்பந்தர், புகலியர்கோன்
    - பக்தி உறவு முறை – சற்புத்திர மார்க்கம்

- நின்ற நெறி – கிரியை நெறி
- வாழ்ந்த காலம் - 16
- அடைந்த முத்தி – சாமீபம்
- முத்தியடைந்த தினம் - வைகாசி மூலம்
- பணிகள் - தேவாரம் படியமை, பாலை நிலத்தை நெய்தல் நிலமாகுமாறு பாடியது, பாண்டியனுக்கு கூனையும் சுரத்தையும் போக்கியது, தேவாரத் திருவேட்டை அக்கினயில் இட்டு பச்சையாய் எடுத்தது, சிவபெருமானிடத்திலே படிக்காசு பெற்றது, விடத்தினால் இறந்த வணிகனை உயிர்ப்பித்தது.

திருநாவுக்கரச நாயனார்

- பெற்றோர் - புகழனார், மாதினியார்
- நாடு – திருமுனைப்பாடி நாடு
- பிறந்த இடம் - திருவாமூர்
- இளமைப்பெயர் - மருணீக்கியார்
- முதலில் பாடியது – கூற்றாயினவாறு...
- வேறு பெயர்கள் - தருமசேனர், நாவுக்கரசர், அப்பர், உழவாரப் படையாளி
- பக்தி உறவு முறை – தாச மார்க்கம்
- நின்ற நெறி – சரியை நெறி
- வாழ்ந்த காலம் - 81
- அடைந்த முத்தி – சாலோகம்
- முத்தியடைந்த தினம் - சித்திரைச் சதயம்
- பணிகள் - தேவாரம் பாடியமை, சிவபெருமானிடத்திலே படிக்காசு பெற்றது, விடத்தினால் இறந்த மூத்த திருநாவுக்கரசரை உயிர்ப்பித்தது, உழவாரம் கொண்டு ஆலயப்பணி செய்தமை

சுந்தர மூர்த்தி நாயனார்

- பெற்றோர் - சடையனார், இசைஞானியார்
- நாடு – திருமுனைப்பாடி நாடு
- பிறந்த இடம் - திருநாவலூர்
- இளமைப்பெயர் - நம்பியாரூரர்
- முதலில் பாடியது – பித்தா பிறைசூடி...
- வேறு பெயர்கள் - வன்றொண்டன், தம்பிரான் தோழர், ஆலால சுந்தரர், சிங்கடியப்பன், வனப்பகையப்பன்
- பக்தி உறவு முறை – சக மார்க்கம்
- நின்ற நெறி – யோக நெறி
- வாழ்ந்த காலம் - 18
- அடைந்த முத்தி – சாரூபம்
- முத்தியடைந்த தினம் - ஆடிச்சோதி
- பணிகள் - தேவாரம் பாடியமை, முதலை விழுங்கிய பிராமணப் பிள்ளையை அம்முதலை வாயினின்றும் மீட்டுக் கொடுத்தது

மாணிக்கவாசக சுவாமிகள்

- பெற்றோர் - சம்புபாதாசிரியார், சிவஞானவதி
- நாடு – பாண்டிய நாடு
- பிறந்த இடம் - திருவாரூர்
- இளமைப்பெயர் - திருவாதவூரர்
- வேறு பெயர்கள் - திருவாதவூரடிகள், மணிவாசகர், கோவைவேந்தர், ஆளுடைய அடிகள்
- பக்தி உறவு முறை – சன் மார்க்கம்
- நின்ற நெறி – ஞான நெறி
- வாழ்ந்த காலம் - 32
- அடைந்த முத்தி – சாயுச்சியம்
- முத்தியடைந்த தினம் - ஆனி மகம்
- பணிகள் - பிறவிதொட்டு ஊமையாயிருந்த பெண்ணை பேச வைத்தமை, பௌத்த துறவிகளோடு வாதிட்டு வென்றமை

**படி- 5:**
- நால்வர் வரலாறுகளை அறிவர்
- அவர்தம் வாழ்க்கை முறைகளை அறிந்து போற்றுவர்
- அவர்களின் சமயப் பணிகளை அறிவர்
- தம்மாலான சமயப் பணிகளை ஆற்ற முன்வருவர்

**தரவிருத்தி உள்ளீடுகள்**
- மாதிரி செயற்பாட்டுப் படிவம்
- டிமை கடதாசி, பேனா

மாதிரிச் செயற்பாட்டுப் படிவம்

குழு 1
- திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரின் வாழ்க்கைக் குறிப்புக்களை எழுதுங்கள்
- திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரின் பணிகளை எழுதுங்கள்
- இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நாடகப்பிரதி ஒன்றினை ஆக்குங்கள்
- அதனை நடித்துக் காட்டுங்கள்

குழு 2
- திருநாருக்கரசு நாயனாரின் வாழ்க்கைக் குறிப்புக்களை எழுதுங்கள்
- திருநாருக்கரசு நாயனாரின் பணிகளை எழுதுங்கள்
- இவற்றினை அடிப்படையாகக் கொண்டு வில்லுப்பாட்டு ஒன்றினை ஆக்குங்கள்
- அதனை இசைத்துக் காட்டுங்கள்

குழு 3
- சுந்தர மூர்த்தி நாயனாரின் வாழ்க்கைக் குறிப்புக்களை எழுதுங்கள்
- சுந்தர மூர்த்தி நாயனாரின் பணிகளை எழுதுங்கள்
- இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நாடகப்பிரதி ஒன்றினை ஆக்குங்கள்
- அதனை நடித்துக் காட்டுங்கள்

குழு 4
- மாணிக்கவாசக சுவாமிகளின் வாழ்க்கைக் குறிப்புக்களை எழுதுங்கள்
- மாணிக்கவாசக சுவாமிகளின் பணிகளை எழுதுங்கள்
- இவற்றினை அடிப்படையாகக் கொண்டு வில்லுப்பாட்டு ஒன்றினை ஆக்குங்கள்
- அதனை இசைத்துக் காட்டுங்கள்

## ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1)......................................................................................................................

(2)......................................................................................................................

(3)......................................................................................................................

## பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

நாயன்மார் வரலாறுகளினூடாக வெளிப்படும் இறைபக்தி, இறையன்பு, இறையருள் பற்றிய செய்திகளை அறியச் செய்து நாயன்மார் வழி சமயத் தொண்டுகளில் ஈடுபட்டு சைவசமயப் பண்பாடுகளை பேணிக் காக்கவும் பிள்ளைகளிடம் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 :** சைவ சமய குரவர்கள், சமயப் பெரியார்கள் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றுவர்.

**தேர்ச்சி மட்டம் 5.2 :** ஈழத்தில் சமயம் வளர்த்த பெரியார்களையும் அவர்களது பணிகளையும் அறிந்து அவர்களுக்கு மதிப்பளிக்கும் முறையை விளக்குவர்.

**செயற்பாடு :** "சேர் பொன் இராமநாதன் வரலாற்றையும் சமயப் பணிகளையும் அறிந்து அவருக்கு மதிப்பளிப்போம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- சைவத்தின் வளர்ச்சிக்காக பணியாற்றியவர்களில் சேர் பொன் இராமநாதனும் ஒருவர் என்பதனை அறிவர்.
- அந்நியர் ஆட்சிக் காலத்தில் சைவசமயம் வீழ்ச்சியுற்ற வேளை சைவத்தையும் தமிழையும் வளர்க்க நாவலர் வழியில் செயல் பட்டவர் என்பதனைக் கூறுவர்.
- சைவப் பாரம்பரியத்தோடு கல்வி கற்க வேண்டும் என்பதற்காக பாடசாலைகளை நிறுவினார் என்பதை அறிவர்.
- கருங்கல் வேலைப்பாடு கொண்ட சிவாலயத்தினை தலைநகரில் நிறுவி சமயத்தினை வளர்த்தார் என்பதனைக் கூறுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் சைவ சமயத்தினை வளர்த்த பெரியார்களைப் பற்றி மாணவர்களிடம் கேட்டு அறியுங்கள். அவர்கள் செய்த சமய சமூகத் தொண்டுகள் பற்றி கலந்துரையாடுங்கள்.

**படி- 2:**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.

**படி- 3:**
- மாணவர்கள் குழுக்களாக செயற்படுவதனை மேற்பார்வை செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தமது கருத்தை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- மேலதிக கருத்துக்கள் தேவைப்படின் விளக்கம் அளித்து மாணவர்களை நெறிப்படுத்துங்கள்.

**படி- 4:**
- பின்வரும் விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
  - பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவ சமய வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தொண்டாற்றியவர்களில் சேர் பொன் இராமநாதனும் ஒருவர். (பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சூழலை சுருக்கமாக விளக்கவும்).
  - பொன்னம்பல முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்.
  - பிரித்தானிய அரசாங்கத்தினால் நைட் பட்டம் வழங்கப்பட்டது.
  - இலங்கை அரசியலிலே சட்ட நிருபண சபையின் முதல் தமிழ்ப் பிரதிநிதி யாவார்.
  - சி. வை. தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர் ஆகிய சமயப் பெரியார்களின் நட்பும் இவருக்கு இருந்தமையினால் சைவ தமிழ் பணிகளில் நாட்டம் கொண்டார்.

- அந்நியர் ஆட்சிக்காலத்தில் சைவசமயம் நலிவுற்ற வேளையில் சைவப் பிள்ளைகள் சைவசமயப் பாரம்பரியங்களோடு கற்கவேண்டும் என்ற நோக்கோடு மருதனாமடத்தில் பெண்பிள்ளைகளுக்கு இராமநாதன் மகளிர் கல்லூரியும், ஆண் பிள்ளைகளுக்கு பரமேஸ்வராக் கல்லூரியும் நிறுவி, அதன் வளாகங்களிலே ஆலயங்களையும் அமைத்து கல்வி கற்க வழி கோலினார்.
- பல நாடுகளுக்கும் சென்று சைவ சமய போதனையை வெளிப்படுத்தி சமயத்தினை வளர்த்தார்.
- கொழும்பில் உள்ள கொச்சிக்கடையில் முழுவதும் கருங்கற்களால் பொன்னம்பலவாணேஸ்வரம் என்ற கோயிலை கட்டிய பெருமை இவருக்கு உண்டு.
- திருக்குறட்பாயிரம், இராமநாதபாஷ்யம், ஔவைநாயகியல் ஆத்திசூடி, திருமந்திர உரை விளக்கம், பகவத் கீதா தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தி யுரையும் போன்ற நூல்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளி யிட்டார்.
- யாழ்ப்பாணத்தில் சைவ பரிபாலன சபையை நிறுவுவதற்கு முன்நின்று உழைத்தார்.
- அவரது புகழை விளங்கச் செய்வதாக பொன்னம்பலவாணேஸ்வர ஆலயம், இராமநாதன் மகளிர் கல்லூரி, யாழ் பல்கலைக்கழகம், பரமேஸ்வராக் கல்லூரி, பரமேஸ்வரன் கோயில் என்பன மிளிர்கின்றன.

### கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- சைவத்தின் வளர்ச்சிக்கு பங்காற்றியவர்களில் சேர் பொன் இராமநாதனும் ஒருவர் என்பதனை குறிப்பிடுவர்.
- கல்விக்கு ஆற்றிய பணிகளை விளக்குவர்.
- பொன்னம்பலவாணேஸ்வர ஆலய சிறப்பினைக் கூறுவர்.
- சேர் பொன் இராமநாதன் எழுதிய சமய நூல்களைப் பட்டியற்படுத்துவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்
- பாடநூல்

## இணைப்பு 5.2.1:

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

**குழு:** சேர் பொன் இராமநாதன் அவர்களின் சமய சமூகப் பணிகளை உரைச்சித்திரமாக தயாரித்து வகுப்பில் வாசியுங்கள்.

### ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

(3) ..............................................................................................................

### பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

(1) சேர்.பொன் இராமநாதன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களைத் தேடிப் பெற வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 6.0** : **சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி கருத்துக்களை வெளிப்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 6.1** : சைவ சித்தாந்தம் தொடர்பாக அடிப்படை விளக்கம் பெற்று தத்துவத்தின் அடிப்படை அம்சங்களை இனங்காண்பர். அவை தொடர்பாக விளக்கம் பெறுவர்.

**செயற்பாடு** : **சைவ சித்தாந்தத்தில் பதி பற்றி அறிவோம்.**

**நேரம்** : 03 பாடவேளைகள்

**கற்றற் பேறுகள்** :

- முப்பொருட்களைக் கூறுவர்.
- பதிக்கு வழங்கப்படும் மறுபெயர்கள் மூன்றினை எழுதிக்காட்டுவர்.
- பதி பற்றிய நிறுவிக் காட்டுவர்.
- பதியின் இலக்கணம் பற்றிய பாடல்களை எடுத்துக் காட்டுவர்
- பதிக்கும் பசுவுக்கும் உள்ள தொடர்புகளைக் கூறுவர்

**பாடத்தை திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1:**
- கண்ணால் காணும் உலகம், உடல் என்பனவற்றினைக் காட்டி இறைவன் பற்றியும் உயிர்பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- எமது ஐந்து விரல்களைக் காட்டி பதி, பசு, பாசம் பற்றி விளக்குங்கள்.
- பின்வரும் விடயங்களின் அடிப்படையில் கலந்துரையாடுங்கள்.
- சைவ சித்தாந்தம் கூறும் உண்மைப் பொருட்கள் மூன்று ஆகும். அவை பதி,பசு, பாசம் என்பனவாகும்.
- பதி என்பதன் விளக்கம், வேறு பெயர்கள் கூறுதல், கடவுள், ஆண்டவன், தலைவன்.
- பசுவானது இறைவனை அடைய முடியாது பந்திப்பதாகும் (தடுப்பது). இதில் ஆணவம், கன்மம், மாயை உள்ளடக்கப்படுகின்றது.

**படி 2:**
- மாணவர்களின் தொகைக்கு ஏற்ப குழுக்களாக்குங்கள்
- ஒவ்வொரு குழுக்களுக்குமுரிய செயற்பாட்டுப் படிவம், ஏனைய பொருட்களை பகிர்ந்தளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவின் செயற்பாட்டிற்கும் உதவுங்கள்.

**படி 3:**
- குழுக்கள் அறிக்கைகளை வழங்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதே குழுவினர் கருத்துக்களை கூற இடம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்களை கூற இடமளியுங்கள்.

**படி 4:**
- பின்வரும் கருத்துக்களை மையமாகக்கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருட்களில் பதி முதன்மையானவர். எங்கும் நிறைந்தவர், எல்லாம்அறிபவர், யாவற்றினையும் அறியும் ஆற்றல் மிக்கவர்.
- பதிக்கு இரு நிலைகள் சொரூபநிலை தடத்த நிலை.
- பதிக்கு எண் குணங்கள் உண்டு .
- அறிவிக்காமலே அறியும் தன்மை கொண்டது பதி
- பாசத்திலிருந்து ஆன்மா விடுபடுகின்ற போதே பதியை அடைகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- செயற்பாட்டுப் படிவம்.
- டிமைகடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்,
- சைவ சித்தாந்த நூல் (முப்பொருள் விளக்கம்)
- வழிபடும் முறை பற்றிய படங்கள்

படி 5: **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருட்கள் எவை என்பதை எழுதுவர்.
- பதி என்பதன் பொருளைக் கூறுவர்.
- பதிக்கு வழங்கப்படும் மறுபெயர்கள் நான்கைக் கூறுவர்.
- பதியின் இலக்கணம், பதி உண்மை பற்றி விளக்குவர்
- பதிக்கும் பசுவுக்கும் இடையிலான தொடர்புகளை விபரிப்பர்

## செயற்பாட்டுப் பத்திரம்

குழு 01
- சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருட்களையும் எழுதுக.
- பதியின் மறுபெயர்கள் மூன்று தருக.
- பதியின் மூவகைத் திருமேனிகளும் எவையென எழுதுக.

குழு 02
- பதியின் இலக்கணம் பற்றி குறிப்பிடுக.
- பதியின் எண்குணங்களைத் தருக.
- பதியின் இயல்புகள் இரண்டு தருக.

குழு 03
- பாசம் என்பதனுள் அடங்கும் மலங்களை எழுதுங்கள்.
- அறிவித்தாலும் அறியமாட்டாத பொருளினைக் குறிப்பிடுக.
- பதிக்கும் பசுவுக்கும் இடையிலான தொடர்புகளை குறிப்பிடுக.

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

   1……………………………………………………………………………………………

   2……………………………………………………………………………………………

   3……………………………………………………………………………………………

   4……………………………………………………………………………………………

   5……………………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) ஆன்மாக்கள் பாசத்திலிருந்து விடுபட இறைவழிபாடு அவசியமானதாகும் இறை வழிபாட்டின் அவசியத்தை பிள்ளைகளுக்கு ஊட்டுங்கள் உயிர் பாசத்திலிருந்து விடுபட்டு இறைவனை அடையும் வழிகளுக்கு அன்றாடம் செய்ய வேண்டிய சைவ பழக்கங்களை கூறி வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0 :** நாட்டார் வழிபாடுகளையும் வழக்காறுகளையும் அறிந்து போற்றுவர்.

**தேர்ச்சி மட்டம் 7.1 :** நாட்டார் வழிபாட்டு முறைகளை அறிந்து தமது வாழ்வில் கடைப் பிடிக்கும் முறைகளை எடுத்துரைப்பர்.

**செயற்பாடு :** "நாட்டார் தெய்வ வழிபாடு பற்றியும் பெண் தெய்வங்கள் பற்றியும் அறிந்து கொள்வோம்."

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள் :**
- நாட்டார் வழிபாடு ஆகமம் சாரா முறையில் இடம்பெறும் என்பதை அறிவர்.
- காளி வழிபாடு இடம்பெறும் இடங்களைக் குறிப்பிடுவர்.
- காளி, முனியப்பர் வழிபாட்டு முறைகளை அறிந்து போற்றுவ துடன், சமய சமூக முக்கியத்துவத்தையும் கூறுவர்.
- தாமும் அவ்வழிபாடுகளில் ஈடுபடுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- நாட்டார் வழிபாடு பற்றி மாணவர்கள் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தங்கள் பிரதேசங்களில் வழிபடப்படும் நாட்டார் தெய்வங்கள் பற்றி மாணவர்கள் கூறுவதற்கு இடமளியுங்கள்.
- கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்கள் குறித்து அதிக கவனம் செலுத்துங்கள்.
  - நாட்டார் தெய்வங்களில் பல பெண் தெய்வங்கள் காணப்படுகின்றன. (உ+ம்) காளியம்மன், திரௌபதையம்மன், மாரியம்மன்
  - நாட்டார் வழிபாட்டில் பல்வேறு வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன.
  - நாட்டார் தெய்வங்களில் கூடுதலானவை காவல் தெய்வங்களாகக் காணப் படுகின்றன. (உ+ம்) வைரவர், முனியப்பர்.
  - நாட்டார் தெய்வ வழிபாட்டில் பல்வேறு சமய நம்பிக்கைகள் காணப்படு கின்றன.

**படி- 2:**
- மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தையும் உரிய தரஉள்ளீட்டுப் பொருட்களையும் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத்தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள். அதன்போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - நாட்டார் பெண் தெய்வங்களில் காளியும் ஒன்றாகும்.
  - இந்துக்களிடையே காளி வழிபாடு பழமையும் புகழும் பெற்று விளங்கு கின்றது.

- போருக்குப் புறப்படுமுன் வீரர்கள் காளியை வழிபட்டுப் பலிகொடுத்துப் போர்க்களம் செல்லும் வழக்கம் இருந்துள்ளது.
- காளிக்கு உயிர்ப்பலி இடும் வழக்கமும் இருந்துள்ளது.
- காளி, சுடலைக்காளி, பத்திரகாளி, எல்லைக்காளி, உருத்திரகாளி எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றாள்.
- திருகோணமலை, மட்டக்களப்பு (புன்னைச்சோலை, போரதீவு, ஏறாவூர்) சிலாபம், வன்னி, மலையகம் போன்ற இடங்களில் காளி வழிபடப்படுகின்றாள்.
- வழிபாட்டு முறைகளாக மடை பரவுதல், தீ மிதித்தல், பலியிடல், பொங்கல், படையல் என்பவற்றைக் கூறலாம்.
- தமிழர்களில் விஸ்வகுல மக்களுக்கும் காளி வழிபாட்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.
- காளி நோய்களிலிருந்து மக்களைக் காப்பவளாகவும்,மாங்கல்யம் தருபவளாக வும், பகைவர்களை அழிப்பவளாகவும், சுகப் பிரசவம் தருபவளாகவும் மக்களால் வழிபடப்படுகிறாள்.
- பாற்குடம் எடுத்தல், காவடி எடுத்தல், தீ மிதித்தல், அலகு பாய்ச்சுதல் போன்றவை மக்கள் காளி மீது வைத்த நம்பிக்கையின் பாற்படுவனவாகும்.
- நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் ஆண்தெய்வங்களில் முனியப்பரும் ஒன்றாகும்.
- இவரும் ஓர் காவற் தெய்வமாகவே போற்றப்படுகின்றார்.
- யாழ்ப்பாணம், கோட்டை முனியப்பர், வல்லைவெளி முனியப்பர், திருகோண மலை முனியப்பர் என முனியப்பரை வழிபடும் இடங்களாகக் காணப்படு கின்றன. (முனியப்பர் பற்றிய விடயங்களை ஆசிரியர் தேடிப் பெற்று, அதற்கேற்ப செயற்பாடுகளை முன்னெடுக்கவும்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- நாட்டார் வழிபாடு என்பதற்கான பொருள் விளக்கத்தைக் கூறுவர்.
- நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் ஆண் தெய்வங்களையும், பெண் தெய்வங் களையும் நிரற்படுத்துவர்.
- காளி வழிபடப்படும் இடங்களையும் வழிபாட்டு முறைகளையும் அட்டவணைப் படுத்துவர்.
- முனியப்பர் வழிபாடு பற்றி தொகுத்துக் கூறுவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்
- படங்கள்
- இறுவட்டுக்கள்

**இணைப்பு 7.1.1:**

## மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

(1) காளி வழிபடப்படும் இடங்கள், வழிபாட்டு முறைகள், சமய சமூக முக்கியத்துவம் என்பவை தொடர்பான தகவல்களைத் தேடித் தொகுக்குக.

(2) முனியப்பர் தொடர்பான தகவல்களைத் தேடித் தொகுக்க.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(3) ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

உங்கள் பிரதேசத்திலுள்ள கிராமியத் தெய்வங்கள் பற்றியும், அதன் வழிபாட்டு முறைகள், சமய சமூக கருத்துக்களையும், சடங்குகளின் ஊடாக கிராமியப் பண்பாடுகளை பேணிக் காக்கவும் பிள்ளைகளிடம் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்.

**தேர்ச்சி 8.0 :** **ஈழத்து சைவ மரபுகளைப் பற்றிய விவரங்களைத் திரட்டி, உரிய ஆதாரங்களுடன் முன்வைப்பர், ஈழத்தில் சைவத்தின் தொன்மையையும், வரலாற்றுச் சிறப்பையும் அறிந்து வெளிப்படுத்துவர்.**

**தேர்ச்சி மட்டம் 8.1 :** ஈழத்து சைவ சமய வளர்ச்சியின் தொன்மை, வரலாறு என்பவற்றை ஆதாரத்துடன் முன்வைப்பர்.

**செயற்பாடு :** ''ஈழத்து சைவ சமய வளர்ச்சியின் தொன்மை, வரலாறு என்பவற்றை அறிந்து சைவசமயப் பாரம்பரியங்களைப் போற்றுவோம்.''

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**
- ஈழத்து சைவசமயத்தின் தொன்மையையும் வரலாற்றினையும் அறிவர்.
- வரலாற்று ஆதாரங்களைக் குறிப்பிடுவர்.
- பண்டைய ஆலயங்கள் பற்றிக் கூறுவர்.
- பாடல் பெற்ற தலங்களை இனம் காண்பர்.
- அந்நியர் ஆட்சியும் சைவசமய மறுமலர்ச்சியும் பற்றி அறிவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- ஈழத்துச் சைவசமயத்தின் தொன்மை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- இதிகாசபுராணம், வரலாற்று நூல்கள், தொல்பொருள் சான்றுகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- புராதன சிவத்தலங்கள் பற்றி மாணவரிடம் கேட்டு அறியுங்கள்.

**படி- 2:**
- மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தையும் உரிய தரஉள்ளீட்டுப் பொருட்களையும் பகிர்ந்து அளியுங்கள்.

**படி- 3:**
- குழுத்தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள். அதன்போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
  - ஈழத்தில் சைவசமயம் மிகவும் தொன்மையானது.
  - இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் என்பன ஈழத்தில் சைவசமய வழிபாட்டி னைக் கூறுகின்றன.

    (உ+ம்) இராவணன் சிவபக்தன், திருக்கோணேஸ்வர ஆலயத்தினை வழிபட்டார்.
    இராமர் முன்னேஸ்வர ஆலயத்தினை வழிபட்டார்.
    திருக்கோணேஸ்வரம் பற்றிப் புராணம் குறிப்பிடுகின்றது.
  - மகாவம்சம் விஜயன் இலங்கைக்கு வரும்போது திருக்கோணேஸ்வரம்,

திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், சந்திரசேகர ஈஸ்வரம் என்ற ஐந்து சிவத் தலங்கள் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது.
- பண்டைய மன்னர்கள் தமது பெயருடன் சிவ என்ற பெயரையும் இணைத் திருந்தனர்.
- திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்ற ஆலயங்கள் நாயன்மார் களால் பாடல் பெற்ற தலங்களாக விளங்கின.
- பல்லவ சோழ அரசர்களின் ஆதரவுடன் சைவக் கோயில்களும் சைவ வழிபாட்டு முறைகளும் பேணப்பட்டன.
- சோழர் ஆட்சியில் ஈழத்தில் பல சிவாலயங்கள் அமைக்கப்பட்டன. (உ+ம்) வானவன் மாதேவி ஈச்சரம், உத்தம சோழ ஈச்சரம்.
- யாழப்பாண ஆரிய சக்கரவர்த்திகள் காலத்திலும் சைவசமயம் ஆலய வழிபாடும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.
- அந்நியர் ஆட்சிக்காலம் (போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்) சைவசமய வீழ்ச்சிக் காலமாக விளங்கியது.
- 19ம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலரும் அவருக்கு பின் வந்தோராலும் சைவசமயம் மறுமலர்ச்சி அடைந்து சைவ ஆலயங்கள் வழிபாடுகள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.
- போர்க்கால சூழ்நிலையில் பாதிப்புக்கள் ஏற்பட்டாலும் சமய பெரியார்கள், சமய நிறுவனங்கள் ஊடாக சைவ சமயப் பாரம்பரியங்கள் பாதுகாக்கப் பட்டு வளர்க்கப்படுகின்றன.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- ஈழத்தின் சைவ சமயத்தின் தொன்மையை அறிவர்.
- வரலாற்று ஆதாரங்களைக் கூறுவர்.
- புராதன சிவத் தலங்களையும், பாடல் பெற்ற தலங்களையும் குறிப்பிடுவர்.
- காலந்தோறும் சைவசமய வளர்ச்சி பற்றி கூறுவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்

## இணைப்பு 8.1.1:

### மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

ஈழத்து சைவசமயத்தின் தொன்மை பற்றி தகவல்களைச் சேகரித்து கட்டுரை எழுதுக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

ஈழத்துப் புராதன சிவத் தலங்களைப் பிள்ளைகளுடன் சென்று தரிசித்து அவற்றின் சிறப்புக்களை கூறுங்கள்.

**தேர்ச்சி 9.0 :** ஈழத்து சைவ மரபுகளையும் தாற்பரியங்களையும் அறிந்து, அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்ற மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 9.1 :** ஈழத்துச் சைவாலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பர்.

**செயற்பாடு :** "ஈழத்து விநாயகர், சிவாலயங்கள் பற்றி அறிவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயச் சிறப்பினை போற்றுவர்.
- நகுலேச்சர ஆலயச் சிறப்பினை அறிவதுடன் அதனைச் சென்று வழிபட வேண்டும் என்ற ஆர்வத்தினைப் பெறுவர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**
- மாணவர்கள் தாமறிந்த விநாயகர், சிவாலயங்கள் பற்றிக் கூற இடமளியுங்கள்.
- தங்கள் பிரதேசங்களிலுள்ள விநாயகர், சிவாலயங்கள் பற்றிக் கூறச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்களில் அதிக கவனம் செலுத்துங்கள்.
  - ஈழத்தின் வட பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற விநாயகர் ஆலயங்களுள் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமும் ஒன்றாகும்.
  - யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற சிவாலயமாகவும், பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகவும் நகுலேஸ்வரம் விளங்குகின்றது.

**படி- 2:**
- மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தையும் உரிய தரஉள்ளீட்டுப் பொருட்களையும் பகிர்ந்து அளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து, தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துதல்.

**படி- 3:**
- குழுத்தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள். அதன்போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

  **(1) மானிப்பாய் மருதடி விநாயகர்:**
  * யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் முக்கோணத்திடர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது.
  * ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்துக்கு முற்பட்ட விநாயகர் ஆலயங்களில் ஒன்றாகும்.

* இவ்வாலயப் பூசைகளிலே சிறப்பானது நித்திய பொங்கல் ஆகும். மகோற்சவம் பங்குனித் திங்கள் 15ம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சித்திரைத் திங்கள் 1ம் நாள் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.
* விநாயகர் சதுர்த்தி, விநாயகர் சஷ்டி, விசேட பூசைகள் நடைபெறுகின்றன.

(2) **நகுலேஸ்வரம்:**

* யாழ்ப்பாணத்தின் வடமேற்குத் திசையில் காங்கேசத்துறைக்கு அண்மையில் கீரிமலையில் அமைந்துள்ளது.
* கீரிமலையின் புராதன பெயர் திருத்தம்பலேஸ்வரம். கீரிமுகமுடைய முனிவர் இத்தலத்தில் நீராடி, அருகிலுள்ள பெருமானை வழிபட்டு வந்ததனால் கீரிமுகம் நீங்கப் பெற்றார். இதனால் கீரிமலை (நகுலகிரி) எனப் பெயர் வந்தது.
* இன்று இத்தலம் நகுலேச்சரம் என அழைக்கப்படுகின்றது.
* இறைவன் பெயர் நகுலேசுவரர்.
  இறைவி பெயர் நகுலாம்பிகை.
  தீர்த்தத்தின் பெயர் - கண்டகி தீர்த்தம் / நகுல தீர்த்தம் / சாகர சங்கம தீர்த்தம் / கீரிமலைத் தீர்த்தம்.
  தல விருட்சம் - கல்லால மரம்
* இராமன், சோழன், நளன், அர்ச்சுனன், மாருதப்புரவீகவல்லி முதலியோரினால் வணங்கப் பெற்ற தலம்.
* விஜயன் இவ்வாலயத்திற்கு திருப்பணிகள் செய்ததாகக் கூறப்படுகின்றது.
* மாருதப்புரவீகவல்லி தீர்த்தமாடித் தனது குன்ம நோய் நீங்கப் பெற்ற புண்ணிய தீர்த்தம் இதுவாகும்.
* இவ்வாலயத்தைச் சூழ சிறாப்பர் மடம், சித்தங்கேணி வைத்தியலிங்கம் மடம், தொல்புரம் கிருஷ்ணபிள்ளை மடம் ஆகியன காணப்படுகின்றன.
* மாசி மாதத்தின் சிவராத்திரி இரவு கழித்து, மறுநாட் காலையில் தீர்த்த உற்சவம் நடைபெறக்கூடியவாறு அதற்கு முன் 15 நாட்கள் மகோற்சவம் நடைபெறும்.
* இத்தீர்த்தம் பிதிர்க்கிரியை வழிபாட்டிலும் சிறப்பிடம் பெறுகின்றது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் சிறப்புக்களை தொகுத்துக் கூறுவர்.
- நகுலேச்சர ஆலயத்தின் சிறப்புக்களைத் தொகுத்து விபரிப்பர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்
- ஆலயப் படங்கள்
- இறுவட்டுக்கள்

**இணைப்பு 9.1.1:**

## மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

**குழு- 1, 3: மானிப்பாய் மருதடி விநாயகர்.**

(1) அமைவிடம்
(2) ஆலய மகிமை
(3) பூசைகளும் விழாக்களும்
(4) வரலாற்றுக் கதைகள்

**குழு- 2, 4: நகுலேச்சரம்**

(1) அமைவிடம்
(2) இறைவன்
(3) இறைவி
(4) தீர்த்தம்
(5) தலம்
(6) ஆலய மகிமை, வரலாற்றுக்கதை
(7) பூசைகள், விழாக்கள்

### ஆசிரியருக்கானது:

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................
(2) ..........................................................................................................................
(3) ..........................................................................................................................

### பெற்றோருக்கானது:

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

தங்கள் பிரதேசத்திலுள்ள ஆலயங்களுக்குச் சென்று தொண்டுகளைச் செய்து, ஆலய வழிபாட்டில் ஈடுபடுத்துங்கள்.

**தேர்ச்சி 9.0 :** **ஈழத்து சைவ மரபுகளையும் தாற்பரியங்களையும் அறிந்து, அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்ற மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வர்.**

**தேர்ச்சி மட்டம் 9.1 :** ஈழத்துச் சைவாலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பர்.

**செயற்பாடு :** "ஈழத்து அம்மன் ஆலயங்களின் சிறப்புக்கள் பற்றி அறிவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயச் சிறப்பினை அறிந்து வழிபடுவர்.
- மட்டக்களப்பு கொத்துக்குளம் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து, தலயாத்திரை செய்ய வேண்டும் என்ற உணர்வினைப் பெறுவர்.

## பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 1:**
- மாணவர்கள் தங்களின் பிரதேசத்தில் உள்ள அம்மன் ஆலயங்கள் பற்றிக் கூற இடமளியுங்கள்.
- கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்களில் அதிக கவனம் செலுத்துங்கள்.
  - யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் ஆலயங்களுள் தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயமும் ஒன்றாகும்.
  - கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் பிரசித்தமான ஆலயமாக விளங்குவது கொத்துக்குளம் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம் ஆகும்.

**படி- 2:**
- மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தையும் உரிய தரஉள்ளீட்டுப் பொருட்களையும் பகிர்ந்து அளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து, தமது அறிக்கையைத் தயாரித்துச் சமர்ப்பிக்க வழிப்படுத்துங்கள்.

**படி- 3:**
- குழுத்தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளைக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.

**படி- 4:**
- குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள். அதன்போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

(1) **தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயம்:**

**அமைவிடம்:**

* யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறைக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் காங்கேசன் துறைக்குத் தெற்கில் தெல்லிப்பளை என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு:**
* கதிர்காமர் என்னும் தேவி உபாசகரால் வேதாரணியத்தில் இருந்து எடுத்து வரப்பட்ட ஸ்ரீசக்கரமே ஆரம்பத்தில் வழிபடப்பட்டது.
* தற்போது மூலஸ்தானத்தில் துர்க்கையம்மன் மூலமூர்த்தியாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.

**தீர்த்தம்:**
* துர்க்கா புஷ்கரணி எனப் பெயர் பெறும்.
* தெப்பக் கேணியாக நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது.

**தலவிருட்சம்:** இலுப்பை

**பூசைகள், விழாக்கள்:**
* ஆவணித் திருவோணத்தைத் தீர்த்தமாகக் கொண்டு 12 நாட்கள் மகோற்சவம் நடைபெறும்.
* நவராத்திரி, சிவராத்திரி, பௌர்ணமி, மாசி மகம், கார்த்திகை விளக்கீடு, செவ்வாய் நோன்பு என்பன சிறப்பானவை.

**சமூகப்பணிகள்:**
* துர்க்காபுரம் மகளிர் இல்லம், அன்னபூரணி மண்டபம், நூலகம், அச்சகம் முதலிய சேவை நிலையங்களை இவ்வாலயம் நிர்வகிக்கின்றது.
* இப்பணிகளுக்கு சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் முயற்சியும் போற்றப்படத்தக்கது.

**(2) மட்டக்களப்பு கொத்துக்குளம் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில்**

**அமைவிடம்:**
* மட்டக்களப்பு நகரின் எல்லையிலே கொத்துக்குளம் என்னும் இடத்தில் அமைந்துள்ளது.
* கதலி வனம் என்பது கொத்துக்குளத்தின் பழமையான பெயர்.

**வரலாற்றுச் சிறப்பு:**
* மட்டக்களப்புப் பகுதியில் அறியப்பெற்ற ஆதியான ஒரு மாரியம்மன் ஆலயம் கொத்துக்குளம் மாரியம்மன் ஆலயமாகும்.
* கலிங்க நாட்டிலிருந்து மட்டக்களப்புக்கு வந்த சக்தி வழிபாட்டுக்கார ரான 3 சகோதரிகளில் ஒருவர் கொத்துக்குளத்தில் நிறுவிய சக்தி ஆலயமே இதுவாகும்.

**பூசைகள், விழாக்கள்:**
* ஆரம்பத்தில் ஆகமம் சாராத முறையில் சடங்குகள் நடைபெற்று வந்தது.
* அவை மாற்றப்பட்டு இன்று ஆகமம் சார்ந்த பூசைகள் நடைபெற்று வந்தது.
* ஆனிப் பூரணையைத் தீர்த்தமாகக் கொண்ட 10 நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது.
* ஆடிப்பூர பாற்குட பவனி, கௌரிக்காப்பு

**கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலய அமைவிடம், தீர்த்தம், பூசைகள், சமூகப்பணி என்பவற்றைப் பட்டியல்படுத்துவர்.
- கொத்துக்குளம் மாரியம்மன் ஆலய வரலாற்றினைக் கூறுவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்
- ஆலயப் படங்கள்
- இறுவட்டுக்கள்

**இணைப்பு 9.1.2:**

**மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்**

**குழு- 1, 3:**
(1) தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்தின் தீர்த்தச் சிறப்பு, தலவிருட்சம், மகோற்சவம், விசேட விழாக்கள் பற்றி தொகுத்து எழுதுக.
(2) இவ்வாலயத்தின் சமய சமூகப் பணிகளைப் பட்டியற்படுத்துக.

**குழு- 2, 4:**
(1) கொத்துக்குளம் முத்துமாரியம்மன் ஆலய புராதன வரலாற்றினைப் பற்றி குறிப்புரை தருக.
(2) இவ்வாலய விசேட விழாக்களைப் பட்டியற்படுத்துக.

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ..........................................................................................................................

(2) ..........................................................................................................................

(3) ..........................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

தங்கள் பிரதேசத்திலுள்ள ஆலயங்களுக்குச் சென்று தொண்டுகளை மேற்கொள்ள உதவுவதுடன், அவ்வாலய வழிபாடுகளில் பங்குகொள்ளச் செய்யவும்.

**தேர்ச்சி 9.0 :** ஈழத்து சைவ மரபுகளையும் தாற்பரியங்களையும் அறிந்து, அதனைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 9.1 :** ஈழத்துச் சைவாலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பர்.

**செயற்பாடு :** ''ஈழத்து முருகன் ஆலயங்களையும் அவற்றின் சிறப்புக்களையும் அறிந்து போற்றுவோம்.''

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**
- சித்தாண்டி முருகன் ஆலயத்தின் சிறப்புக்களை அறிந்து போற்றுவர்.
- பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலயத்தின் சிறப்புக்களையறிந்து போற்றுவர்.
- தம் வாழ்க்கையில் இவ்வாலயங்களிற்கு தலயாத்திரை செல்ல வேண்டும் என்ற உணர்வினைப் பெறுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி- 1:**
- ஈழத்தில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயங்கள் பற்றி மாணவர்கள் கூறச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- மாணவர்கள் தமது பிரதேசத்திலுள்ள முருகன் ஆலயங்கள் பற்றிக் கூறச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்களில் அதிக கவனம் செலுத்துங்கள்.
  - மட்டக்களப்பு மாவட்டத்தில் சித்தாண்டி என்னும் கிராமத்தில் சித்தாண்டி முருகன் ஆலயம் அமைந்துள்ளது.
  - பேராதனை பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ளது பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலயம் ஆகும்.
  - இவ்விரு ஆலயங்களும் ஆகம முறை சார்ந்தும், ஆகமமுறை சாராதது மாகக் காணப்படுகின்றன.

**படி- 2:**
- மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரத்தையும் உரிய தரஉள்ளீட்டுப் பொருட்களையும் பகிர்ந்து அளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து, தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்துதல்.

**படி- 3:**
- குழுத்தேடல் செயற்பாட்டிற்கான ஆலோசனைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடிப் பெற்ற விடயங்களை அறிக்கைகளாக்கி முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.

**படி- 4:** • குழுக்கள் முன்வைத்த விடயங்கள், செயற்பாட்டின் அடிப்படையில் நீங்கள் தொகுப்பினை மேற்கொள்ளுங்கள். அதன்போது கீழ்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

(1) **சித்தாண்டி முருகன் ஆலயம்:**
* மட்டக்களப்பின் வடபகுதியில் சித்தாண்டி என்னும் கிராமத்தில் உள்ளது.
* சிகண்டி எனும் முனிவர் தம்மிடம் இருந்த வேலாயுதத்தை வழிபட்ட துடன் தொடர்புடைய ஆலயம்.
* கிழக்கிலங்கையில் அமையப்பெற்ற திருப்படைக் கோயில்களுள் ஒன்றாகும்.
* ஆலய மகோற்சவம் ஆவணி மாத பிரதமையில் கொடியேறி 15 நாட்கள் திருவிழாவின் பின் பௌர்ணமியில் தீர்த்தோற்சவம் நடை பெறும்.
* மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புடையது.
* பூசைகள், விழாக்கள் சிறப்பானவை. (உ+ம்) மகோற்சவம், சூரன்போர்.

(2) **பேராதனை குறிஞ்சிக் குமரன்:**
* பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ளது.
* 1952 இல் பேராசிரியர் த. நடராஜா அவர்கள் ஆலயம் அமைப்பதற் கான நன்கொடையை வழங்கினார்.
* 1966 இல் நிலம் ஒதுக்கப்பட்டு 1968 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.
* மூர்த்தி - குறிஞ்சிக்குமரன்
  தீர்த்தம் - மகாவலி கங்கைக் கிளையாறு.
* நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

## கணிப்பீட்டு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**படி- 5:** பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.
- சித்தாண்டி முருகன் ஆலய வரலாற்றினைத் தொகுத்துக் கூறுவர்.
- குறிஞ்சிக் குமரன் ஆலய வரலாற்றினை அறிந்து மதிப்பளிப்பர்.
- ஆலயங்களுக்குத் தலயாத்திரை, மேற்கொள்வர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- டிமை கடதாசி, பேனா
- செயற்பாட்டுப் பத்திரம்
- ஆலயப் படங்கள்
- இறுவட்டுக்கள்

## இணைப்பு 9.1.3:

## மாதிரி செயற்பாட்டுப் பத்திரம்

(1) சித்தாண்டி எனப் பெயர் பெறக் காரணம் யாது?
(2) சித்தாண்டி முருகன் ஆலய வரலாறு யாது?
(3) சித்தாண்டி முருகன் ஆலய மகோற்சவம் நடைபெறும் காலம் யாது?
(4) குறிஞ்சிக் குமரன் ஆலய தீர்த்தம் யாது?
(5) குறிஞ்சிக் குமரன் ஆலயத்தை நிர்வகிப்போர் யாவர்?
(6) குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் நடைபெறும் விழாக்கள் எவை?

**ஆசிரியருக்கானது:**

கற்றல் - கற்பித்தலின்போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

(1) ......................................................................................................................

(2) ......................................................................................................................

(3) ......................................................................................................................

**பெற்றோருக்கானது:**

**வீட்டில் பின்தொடர் செயற்பாடுகள்:**

ஆலயத் தொண்டுகளில் தாமும் ஈடுபட்டுப் பிள்ளைகளையும் ஈடுபடுத்துவதுடன் ஆலய தரிசனம் செய்வதிலும் ஈடுபடுங்கள்.

**தேர்ச்சி 10.0 : பிறசமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து அவற்றிற்கு மதிப்பளிப்போம்.**

**தேர்ச்சி மட்டம் 10.1:** பிறசமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து கொள்வர். அவை பற்றி விளக்குவர்.

**செயற்பாடு :** **இலங்கையில் உள்ள சமயங்களை அறிவோம். அவர்களின் வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து மதிப்பளிப்போம்.**

**நேரம் :** 01 பாடவேளை

**கற்றல் பேறு :**

- இலங்கையில் உள்ள சமயங்களை அறிவர்.-
- பிற சமயங்களுக்கு மதிப்பளிப்பர்.
- சைவசமய வழக்காறுகளையும் ஒழுகலாறுகளையும் அறிந்து வாழ்வில் கடைப்பிடிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படி 1 :**
- இலங்கையில் உள்ள சமயங்களைக் கூறும்படி மாணவர்களிடம் வினவுங்கள்.
- அவர்கள் வழிபடும் கடவுளர் பற்றிக் கேட்டு அறியுங்கள்.
- அவர்கள் கொண்டாடும் விழாக்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**படி 2 :**
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களைச் சிறுசிறு குழுக்களாக்குதல்.
- ஓவ்வொரு குழுவிற்கும் செயற்பாட்டுப் பத்திரங்களை வழங்குங்கள்.
- டிமைன் பேப்பர், பேனா என்பவற்றை ஒவ்வொரு குழுவிற்கும் பகிர்ந்தளித்தல்
- ஓவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதனை அவதானித்து, தமது அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பிக்க வழிப்படுத்தல்.

**படி 3:**
- ஒவ்வொரு குழுவும் வகுப்பின் முன்னால் வந்து தமது அறிக்கையை முன் வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிக்கையைப் பூரணப்படுத்த அதே குழுவிற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவர்களது விமர்சனக் கருத்துக்களையும் தெரிவிக்க இடமளியுங்கள்.
- மாணவர்களின் குறைநிறைகளை இனங்கண்டு செயற்பாட்டினை முழுமைப் படுத்துங்கள்.

படி 4 : - ஒவ்வொரு மாணவரும் எழுதிய அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- ஒவ்வொரு மாணவரினதும் செயற்பாட்டிற்கும் ஏனைய மாணவர்கள் கருத்துக்களை வழங்க இடமளியுங்கள்.
- பின்வரும் விடங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.
- சைவம், கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் இலங்கையில் உண்டு.
- சைவம் - சிவன்
    - கிறிஸ்தவம் - இயேசு
    - பௌத்தம் - கௌதம புத்தர்
    - இஸ்லாம் - அல்லாஹ் ஆகிய கடவுள்களை வழிபாடு செய்கின்றனர். ·
    - இச் சமயங்களின் முதல் நூல்கள்
      சைவம் - வேதம், ஆகமம்
      கிறிஸ்தவம் - பைபில்
      பௌத்தம் - திரிபீடகம், தம்மபதம்
      இஸ்லாம் - திருக்குர்ஆன்
    - விசேட விழாக்கள்
        - சைவம் - சித்திரைப் புத்தாண்டு, தைப்பொங்கல், தீபாவளி
          கிறிஸ்தவம் - பெரிய வெள்ளி , நத்தார் பண்டிகை
          பௌத்தம் - புதுவருடம், வெசாக்
          இஸ்லாம் - றமழான், ஹஜ் பெருநாள்
    - இம் மதங்கள் இறை உண்மையையும், அன்பையும், இறைபக்தியையும் விளக்குகிறது.
    - சகல மதங்களையும் போற்றி மதிப்பளித்தல் வேண்டும்

**தரவிருத்தி உள்ளீடுகள்:** இணைப்பு 1.2.2 இல் உள்ள மாதிரி செயற்பாட்டுப் படிவம்
சமயங்களின் பிரதான நூல்கள், பண்டிகை தொடர்பான காட்சிகள், வீடியோ ஒளிப்படங்கள்
டிமைன் கடதாசி, பிளாற்றினம் பேனா, பாடநூல்

படி 5 : **கணிப்பீட்டு, மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்

- இலங்கையிலுள்ள சமயங்களை அறிவர்.
- சமயங்களின் பிரதான தெய்வங்களைப் பட்டியற் படுத்துவர்.
- ஒவ்வொரு சமயத்துக்குமுள்ள முதன்மையான நூல்களைக் கூறுவர்.
- ஓவ்வொரு சமயத்தாரும் கொண்டாடப்படும் விழாக்களைக் கூறுவர்.
- பிறசமயங்களுக்கு மதிப்பளித்து வாழ்வர்.

**இணைப்பு 7.1.1 செயற்பாட்டுப் பத்திரம்**

இலங்கையில் உள்ள சமயங்கள்

| சமயங்கள் | வழிபாட்டுக்குரியவர் | முதன்நூல் | விசேட விழாக்கள் |
|---|---|---|---|
| 1.சைவசமயம் | | | |
| 2.கிறிஸ்தவம் | | | |
| 3.பௌத்தம் | | | |
| 4.இஸ்லாம் | | | |

**ஆசிரியருக்கானது:**

1. கற்றல்- கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவரிடையே ஏற்பட்ட பிரதிபலிப்புக்களைப் பட்டியற்படுத்துங்கள்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு உங்களது அடுத்த நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துங்கள

   1……………………………………………………………………………………

   2……………………………………………………………………………………

   3……………………………………………………………………………………

   4……………………………………………………………………………………

   5……………………………………………………………………………………

2. வீட்டில் பின் தொடர் செயற்பாடுகள் (பெற்றோருக்கானது) இலங்கையில் உள்ள அனைத்து சமயங்களையும் அதன் கருத்துக்களையும் நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களையும் தேடி அறிந்து அவற்றுக்கு மதிப்பளிக்கும் வகையில் பிள்ளைகளை பழக்கப்படுத்துங்கள்.
   சமயக்கருத்துக்களை வாழ்வில் பின்பற்ற வழிகாட்டுங்கள்.

# கணிப்பீடும் மதிப்பீடும் - விளக்கம்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியன, கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்னேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) கணிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும்போதே கணிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம்பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர் களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங் களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமுமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன் மூலம், தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்கள் செய்யும் வேலை களை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவரது ஆற்றல், அபிவிருத்தி என்பன எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா? என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்குத் தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து, அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக் கொண்டார்களா? என உறுதிப்படுத்தல் கற்றல் - கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல் /முன்னூட்டல் என்பனவாகும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமை களையும் ஆற்றல்களையும் இனம் காணும்போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டலையும் வழங்குவதும் ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர் களுக்கு அவசியமாகின்றது. கணிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாகப் மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட கணிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல், மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே, அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அணுகுமுறை வகைகள் வருமாறு:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி/ முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடு